Registered with Registrar of Newspaper for India under No. 17755/69 January 1, 2011.

RANI MUTHU (FORTNIGHTLY) Regd. No. TN/CCN/325/08-10








# ஒட்டக ஓட்டம்

அரபு நாடுகளில் மிகவும் பிரசித்திப் பெற்றது ஒட்டக ஓட்டம். 5 லட்சம், 10 லட்சம், ஒரு கோடி வரை பரிசு கொடுக்கிறார்கள்.

ஒட்டகங்கள் மீது இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், இலங்கையைச் சேர்ந்த சிறுவர்களைத்தான் அமர்த்துவார்கள். நன்கு பழக்கப்படுத்தினாலும், சிறுவர்கள் அவ்வப்போது ஒட்டகத்தில் இருந்து கீழே விழுந்து பலத்த காயங்களும்... பல நேரங்களில் மரணமும் அடைவார்கள்.

இதற்கு நிறைய நாடுகள் எதிர்ப்பு தெரிவிக்க... தற்போது, ஓட்டப்பந்தய ஒட்டகங்கள் மீது, சிறுவர்களுக்குப் பதிலாக 'ரோபோ' பொம்மையை அமர்த்தி 'பெல்ட்' போட்டு- அதன் கையில் ஒரு சாட்டை கொடுக்கிறார்கள்.

- பருத்தி இக்பால், மேலப்பாளையம்.


## தனி ரெயில்

★ ஜப்பானில் முட்டை..., மீன் ஏற்றிச் செல்ல தனி ரெயில்கள் ஓடுகின்றன.

★ ஒரு நிமிடத்தில் ஆண்களுக்கு 72 தடவையும், பெண்களுக்கு 78 தடவையும் இதயம் துடிக்கிறது.

- நெ.ராமன், சென்னை.





இந்துமதி



# பெண்மையின் நிறம் வெண்மை

## 1

மூன் அறையின் கடிகாரத்தில் இருந்து ஒரு பறவை வெளிப்பட்டு- "குக்கூ.... குக்கூ,.." என்று சன்னமாய்க் குரல் கொடுத்துவிட்டு- மீண்டும் உள்ளே

நுழைந்துகொண்டது.

இவள் பார்வை, கடிகாரத்திற்குப் போயிற்று.

மணி எட்டு. அதுவரை நம்பிக்கையும், எதிர்பார்ப்புமாகக் காத்திருந்தவளின் மனதில் சடாரென்று ஒரு பள்ளம் விழுந்தது. இன்றைக்கும் அவன் வரவில்லை! இனி வரமாட்டான். வருவதானால் இதற்குள் வந்திருக்க வேண்டும். வழக்கமாக ஆறு, ஆறரைக்கு வந்து– இந்த நேரத்தில் திரும்பிப் போய்விடுவான்.

இரவு நேரங்களில் அவன் இங்கு தங்கினதில்லை. வீட்டிற்குப் போய்விடுவான். பழக ஆரம்பித்ததில் இருந்து இதுவரை ஒரு ராத்திரி கூட இவளுடன் இருந்ததில்லை.

இவள் மனதிற்குள் அது பெரிய குறையாக இப்போதும் நிற்கிறது. எத்தனையோ தடவை தன் ஆசையை அவனிடம் வெளிப்படுத்தி இருக்கிறாள். கெஞ்சிக் கேட்டிருக்கிறாள்.

"இன்னிக்கு ஒரு நாள் ராத்திரி மட்டும் இங்க தங்குங்களேன்..."

அவன் பதில் சொல்லாமல் சிரிப்பான்.

அவளைஇழுத்துத்தன்னோடுசேர்த்துஅணைத்துக்கொண்டு உச்சியில் முத்தமிடுவான். அவனது அந்தச் செய்கைக்குப் பின்னர் அவளது ஆசையும், எதிர்பார்ப்பும் தீவிரமாகுமே தவிர... குறையாது.

மெல்ல பார்வையை உயர்த்தி, மெலிதான குரலில் மறு படியும் கேட்பாள்.

"பிளீஸ், ஒரே ஒருநாள்... ஒரு ராத்திரி நீங்க இங்க தங்கணும்னு ஆசையா இருக்கு. ராத்திரி முழுசும் நான் உங்களுக்குக் கால் பிடிச்சு விடணும்; உங்க தோள் மேல் தலை வச்சுப் படுத்துக்கணும்; காலைல உங்களுக்கு முன்னால் எழுந்து உங்க பாதத்தைத் தொட்டு கண்ணுல ஒத்திக்கணும்;



நீங்க கண் முழிக்கிறப்போ– குளிச்சு, பூஜை முடிச்சு, உங்க எதிர்ல காப்பி தம்ளரோடு நிற்கணும்..."

அவனிடமிருந்து ஆழமாய்ப் பெருமூச்சு வெளிப்படும். அவளது தோளில் படர்ந்த கை மெல்ல தட்டிக் கொடுக்கும். அதன் லயிப்பில், 'உன்னை... உன் ஆசையை– என்னால் அதன் முழுப் பரிமாணத்துடன் புரிந்துகொள்ள முடிகிறது...' என்று சொல்லாமல் சொல்வது தெரியும்.

ஆனாலும் பதில் பேசமாட்டான்.

"என்ன... தங்கறீங்களா?"

"ம்ஹூம். வேணாம் மஞ்சு. நாம ரெண்டு பேரும் சேர்ந்து வெளியூர் போறபோது, எத்தனை நாள் ராத்திரி அப்படி இருந்திருக்கோம். இங்கே, இந்த வீட்டில் இருந்தால்தானா...? ம்... சொல்லு..."

வருடிக் கொடுக்கிற மாதிரி மென்மையாய்ப் பேச அவனுக்கு மட்டுமே வருமோ என்று தோன்றும்.

அதில் இவள் நெகிழ்ந்து போவாள்.

ஆனாலும் தன் கெஞ்சலைக் கைவிட மாட்டாள்.

"வெளியூர்ல இருக்கோம். ஆனால் இங்க, இந்த வீட்டுக்குத் தன் எஜமானர் ஒரு ராத்திரியாவது தங்கணும்னு இருக்காதா?"

"மஞ்சு... நீ இத்தனை தூரம் கேட்கவே வேணாம். முடியும்னா உன் வாயிலிருந்து ஒரு வார்த்தை வர்றதுக்கு முன்னாலேயே சரி சொல்லி இருப்பேன். முடியாத காரணத்தால்தான் பேசாமல் இருக்கேன்..."

"ஏன் முடியாது? புவனா சண்டை போடுவாங்கன்னு தயங்கறீங்களா?"

"அவளை விடு... அவ எதுக்குத்தான் சண்டை போடலை? அவ கத்தலும், சண்டையும் பழகிப்போன

விஷயம்தானே! அவளுக்காக நான் இங்க தங்கமாட்டேன்னு சொல்லலை..."

"பின்னே...?"

"நிம்மிக்காகத்தான் மாட்டேங்கறேன்."

"நிம்மிக்காகவா!?"

"ஆமாம் மஞ்சு. நான் சென்னையில இருந்துகிட்டே ராத்திரி வீட்டுக்கு போகலேன்னா அது என்ன நினைக்கும்? அது மனசும் எப்படியெல்லாம் பாதிக்கும்? அப்பா தன் இஷ்டப்படி ராத் தங்கறாரே, அதே மாதிரி நாமும் தங்கினால் என்னன்னு தோணிச்சின்னா என்ன ஆகும்?

அதைக் கேள்வி கேட்கிற மூஞ்சி எனக்கு இருக்குமா? 'நீ மட்டும் என்ன ஒழுங்கு?'ன்னு திருப்பிக் கேட்டுடிச்சின்னா... என்ன செய்ய முடியும்? புவனாதான் நிம்மியைக் கவனிக்கமாட்டேங்கறா. எந்தக் கவலையும் படமாட்டேங்கறா. சதாசர்வகாலமும் யாரையாவது திட்டிக்கிட்டு, சண்டை போட்டுக்கிட்டு–அப்புறமா அழுது அட்டகாசம் செய்யத்தான் அவளுக்கு நேரமிருக்கு.

ஏற்கெனவே நிம்மிக்கு அம்மாவைப் பிடிக்கிறதில்லை. வீடு பிடிக்கலை. வீட்ல தங்கற நேரம் குறைச்சலா இருக்கும்படி பார்த்துக்கறா... ராத்திரி படுக்கறது மட்டும் வீட்டுலதான்றதை வச்சிட்டிருக்கா. அதனால்தான் சொல்றேன். அப்பா வெளியே தங்கறாரே... நாமும் தங்கலாமென்ற எண்ணம் அந்த மனசுல நுழையக் கூடாதுன்னுதான் ஜாக்கிரதையா இருக்கேன்.

ரெண்டும் கெட்டான் வயசு பாரு... பதினெட்டு, பத்தொன்பதுல என்ன விவரம் புரியும்? எந்த முதிர்ச்சி இருக்கும்? அதுவும் அம்மா மாதிரி பிறக்கிறபோதே வாய்ல தங்கக் கரண்டியோடு பிறந்த பொண்ணு... கஷ்டம்னால் என்னன்னே அனுபவிக்காதது. கஷ்டப்படாத மனசுக்கு எப்படிப் பக்குவம் வரும்? அதனாலதான் மஞ்சு...





## பழமையான கொடி

1219–ம் ஆண்டுமுதல் பயன்படுத்தப்பட்டு வரும் டென்மார்க் நாட்டு கொடிதான் உலகில் மிகவும் பழமையானது.

## நன்றித் திருநாள்

நவம்பர் நான்காம் வியாழக்கிழமையை 'நன்றித் திருநாள்' என கோலாகலமாக கொண்டாடுகிறது அமெரிக்கா. இது கடவுளுக்கு நன்றி செலுத்தும் நாள்.

## செங்கல் ரெயில்

வடகிழக்கு இங்கிலாந்து டார்லிங்டனில் உலகில் முதன் முதலாகப் பயணிகள் ரெயில் ஓடியது. டேவிட்மாக் என்பவர் 1997–ம் ஆண்டு செங்கல் ரெயிலைக் கட்டினார். இது உலக சாதனையாகும்.

## மனிதச் சந்தை

இந்தியாவில் மனிதர்களை விற்கும் சந்தை பஞ்சாபில் உள்ளது. பீகார், உத்தரபிரதேசத்தைச் சேர்ந்தவர்கள்தான் இங்கே அதிகமாக விற்கப்படுகிறார்கள். வீட்டு வேலைக்கு ஆள் தேடுவோர் இங்கு வந்து ஆண்களையும், பெண்களையும் பணம் கொடுத்து வாங்கிச் செல்கிறார்கள்.

**– எஸ்.விஜயலட்சுமி, ஆதம்பாக்கம்.**

## வேண்டாம்

சூடாக சாப்பிட்ட நொடியே 'ஜில்'லான உணவு– பானங்களுக்கு மாறினால் உடலுக்கும், பல்லுக்கும் பாதிப்பு ஏற்படும்.

**– அரிகரன், கொல்லம்.**

# கலாம் மொழிகள்



● சிக்கல்களை எதிர்கொள்ளும்போது, கூடவே பல திறமைகளும் வெளிப்படுகின்றன.

● 'நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதும் மண்டியிடுவதில்லை.

● வெற்றிகரமான சாதனைகளுக்கு 4 அடிப்படை அம்சங்கள் அவசியம். அவை: நிர்ணயம், ஆக்கப்பூர்வமான சிந்தனை, கற்பனைக் கண்ணோட்டம், நம்பிக்கை.

● அலட்டிக்கொள்ளாமல் இருக்கும்போது அபாரமான செயல்பாட்டிற்குப் பலன் கிடைத்திடும்.

● விஷயங்கள் எப்படி வருகின்றனவோ அதை அப்படியே எடுத்துக்கொள்ள வேண்டும்.

● எந்த அளவிற்கு உங்களுடைய அறிவுத் திறனால் தற்போதைய நிலவரம் வரை அறிந்து வைத்திருக்கிறீர்களோ அந்த அளவிற்குதான் நீங்கள் சுதந்திர மனிதன்.

● சுயசிந்தனை ஆற்றலும், தன்னம்பிக்கையும், தன்னைத்தானே அறிந்துகொள்ளும் நிறைந்த மக்களைக் கொண்டிருக்கும் தேசத்தை எந்த விரோத சக்தியாலும் ஆட்டிப்படைக்க முடியாது.

# துளிகள்


டாக்டர் ராதாகிருஷ்ணன்

● பல்வேறு பல்கலைக்கழகங்களில் டாக்டர் பட்டம் பெற்ற இந்திய முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன்.

● வரிசையாய் போகும் எறும்புகள் பெண் இனம். தனித் தனியாக செல்லும் எறும்புகள் ஆண் ரகம்.

- வ. பழனி, புதுச்சேரி.

● சுவீடன் நாட்டில் நாய்களுக்கு ரத்த வங்கி உள்ளது.

- சிவ.ராமலிங்கம்,ஆத்தூர்.



மாட்டேங்கறேன்.

ஏன் மஞ்சு ... இல்லேன்னா நீ கேட்டு மறுப்பேனா...? நான் தினமும் ராத்திரி முழுசும் உன் கூட இல்லை? உன் பக்கத்துல உன்னை அணைச்சுகிட்டு படுக்கலை...? நான் அந்த வீட்ல என் அறையில தனியா படுக்கறேன்னா நினைச்சே...! உன் கூடத்தான் படுக்கறேன். நீ பக்கத்துல இருக்கிறதா நினைச்சுகிட்டு படுக்கறேன். அந்த மாதிரி உன்னால நினைச்சுக்க முடியாதா...? நினைவு கொடுக்கிற சுகத்தையும், சந்தோஷத்தையும்விட, அதிகமா உடம்பு கொடுத்துடப் போறதில்லை இல்லையா மஞ்சு...?"

இவளுக்குள் பளீரென்று அத்தனை நாளாக மூடிக் கிடந்த ஜன்னல் ஒன்று திறந்துகொண்டது. நெஞ்சுக்குள் பொங்கிப் பொங்கி வந்தது. இதுதான்... இது போதும் என்று தோன்றிற்று.

இந்த மனசையும், அன்பையும், ஐக்கிய மனப்பான்மையையும்விட வேறு என்ன வேண்டும்? 'உன்னைப் பெற்றால், உலகத்தில் உள்ள எல்லாம் பெற்ற மாதிரித்தானே...?' என்று எப்போதோ படித்த கவிதை வரிகளின் நிஜமான அர்த்தம் புரிய– அவன் தோளில் தலையை சரித்துக்கொண்டு கண்ணோரங்களில் திரண்டு வந்த கண்ணீரை அடக்க முயன்று– மிக மெல்லிய குரலில் உணர்ச்சி மிகுந்து சொன்னாள்.

"நான் எந்த ஜென்மத்திலோ ஏதோ பெரிய புண்ணியமாகப் பண்ணி இருக்கேங்க. நல்ல பூப்போட்டு அர்ச்சனை பண்ணி இருக்கேன். அதன் பலனாத்தான் நீங்க எனக்குக் கிடைச்சிருக்கீங்க. எங்கேயோ குப்பையில கிடந்தவளைக் கொண்டு வந்து, உங்க மனைவியா இல்லேன்னாலும்... மனைவி மாதிரி வாழ முடிஞ்ச இந்தக் கொஞ்ச நாள் போறும். இப்படி உங்கக்கூட இருக்கிறப்ப, உங்க மடியில தலை சாய்ச்சுக்கிட்டு

இருக்கிறப்போ உயிர் போயிடணும்னு தோ..."

சடாரென்று தன் கையால் அவளது உதட்டை அழுத்தினான் அவன். அவளது மிருதுவான கூந்தலில் முகத்தைப் புதைத்தவாறு குரல் கரகரக்கச் சொன்னான்.

"இல்ல...அப்படியெல்லாம் உன்னைப் போகவிட மாட்டேன் மஞ்சு. எனக்கு நீ வேணும். நான் உயிரோட இருக்கிற கடைசி நிமிஷம் வரை வேணும். நீயில்லாத ஒரு நிலைமையை என்னால் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியலே. நீ இல்லைன்னால் நான் இல்லை. அதனால் கொஞ்சம் சுயநலமா தோணினால் கூடப் பரவாயில்லை. எனக்காக எத்தனையோ செய்யற நீ இதையும் செய்திடணும்."

"என்ன... சொல்லுங்க?"

"நிச்சயமா செய்யறேன்னு சொல்லு..."

"இது என்ன கேள்விங்க. நீங்க சொல்லமாட்டீங்களா, நான் செய்ய மாட்டேனான்னு காத்துக்கிட்டிருக்கேன். உங்ககிட்டே இருந்து வர்ற ஒவ்வொரு வார்த்தையையும் தெய்வத்தோட வாக்கா ஏத்து நடத்திட்டிருக்கேன். இந்த உடம்பு, உயிர், மனசு எல்லாமே உங்களுடையதுன்னு நினைச்சுட்டிருக்கேன். குறைங்கறதே உங்களுக்குத் தெரியக்கூடாது. கஷ்டங்கறதே வரக் கூடாதுன்னு வேண்டிட்டிருக்கேன்.

உங்க மனசை, உங்களை சந்தோஷப்படுத்தற ஒரே காரணத்துக்காகத்தான் ஆண்டவன் என்னைப் படைச்சு பூமிக்கு அனுப்பி வச்சிருக்காங்கற மனோபாவத்துல இருக்கேன். அப்படிப்பட்ட என்கிட்ட போய் நிச்சயமா செய்வியான்னு கேட்கறீங்களே... செய்யமாட்டேனா...? சொல்லுங்க... எதுவானாலும் செய்வேங்க..."

அவன் ஒரு விநாடி கண்களை மூடிக்கொண்டான். அவளது அந்த நிஜமான பிரியமும், பாசமும் கண்களில்



நீரை வரவழைத்தன.

குரல் இறுகி வார்த்தை வராமல் தடுமாற– மவுனமாக அப்படியே உட்கார்ந்திருப்பதைப் பார்த்ததும் அவள் தன் முகத்தை உயர்த்தி– அவனது முக வாயைப் பற்றி எல்லையற்ற காதலுடன் கேட்டாள்.

"என்ன செய்யணும்... சொல்லுங்க?"

"ம்...?"

"நான் என்ன செய்யணும்னு கேட்டேன்."

"எனக்கப்புறம் செத்துப் போகணும். நான் இருக்கிற வரை உயிரோட இருக்கணும்!"

பளீரென்று இவள் நெஞ்சில் மின்னல் வெட்டி, உதட்டில் புன்னகையாய் இறங்கியது.

"அவ்வளவுதானே... உங்க உயிர் பிரிஞ்ச மறு நிமிஷம் என் உயிர் பிரிஞ்சிடுங்க. சாவு கூட நம்மைப் பிரிக்கப் பயப்படும். வேணும்னால் பாருங்களேன்... நம்ம ரெண்டு பேர் சாவுக்கும் இடையில் நிமிஷ நேரம்தான் இருக்கும்."

அந்தப் பதில்... அவளது அசைக்க முடியாத நம்பிக்கை, ஆணித்தரமான பேச்சு... எல்லாவற்றையும்விட– இவனுக்காக... இவனது நிம்மதி, சந்தோஷம் இவற்றிற்காகவே வாழ்கிற அந்த அன்பு... ஒரு காவியம் எழுதக்கூடிய அளவிற்கு ஆழமான காதல்.

அப்போது அவன் உணர்ச்சிப் பெருக்கில் அவளது முகத்தோடு தன் முகம் சேர்த்து உருகி– அவள் சொன்னதையே திருப்பிச் சொன்னான்.

"ஓ... நான்தான் எந்த ஜென்மத்துலயோ கொஞ்சமா இல்லே, நிறைய புண்ணியம் பண்ணி இருக்கணும். அதான் நீ கிடைச்சிருக்கே! கணவன்– மனைவி உறவுன்னால் நீ புவனா கூட வாழற வாழ்க்கை இல்லடா பாவி... இதுதான்

தாம்பத்திய உறவுன்னு எனக்குக் காட்ட– நான் அனுபவிக்க– ஒரே மனசா உருகிக் கரைய– நீ சொன்ன மாதிரி தெய்வம் உன்னை என் கண்ணுல காட்டி இருக்கு. உனக்குத்தான்டா எடுத்துக்கோன்னு கட்டளை இட்டிருக்கு.

அவகிட்ட மனசெல்லாம் புண்ணாக்கிக் கிடக்கிறாயேடா பாவி... அதுக்கு ஒற்றி எடுக்கிற பஞ்சாகத்தான் இவளைக் கைகாட்டி விட்டிருக்கேன்னு இரக்கப்பட்டிருக்கு. நல்ல வேளையா தயங்காமல் உடனே எடுத்துக்கிட்டேன். வாழ்க்கைன்னா என்னன்னு புரிஞ்சுக்கிட்டேன். சந்தோஷம்கிறது எப்படி இருக்கும்ன்னு அனுபவிச்சுட்டேன்.

எனக்கு இது போதும் மஞ்சு. நீ போதும். வீடு, வாசல், கார், பணம், ஆள் படை எதுவும் வேணாம். தொழிற்சாலை வேணாம். அப்படியே உன் மடியில் தலை சரிச்சுக்கிட்டு இருக்கிறப்ப என் உயிர் போயிடுச்சுன்னா சரி."

சடாரென்று இப்போது இவள்– அவன் வாயைப் பொத்தி சிரிக்க முயன்றவாறு சொன்னாள்.

"அதெல்லாம் இப்ப பேச வேணாம். மணி என்ன ஆச்சு பார்த்தீங்களா? புறப்படுங்க... ரொம்ப நேரமாயிடுச்சுன்னா புவனா உங்களைப் பிடிச்சு உலுக்கிடுவாங்க."

அவன் மனசே இல்லாமல் எழுந்து– நாற்காலியின் முதுகில் கிடந்த சட்டையை எடுத்து மாட்டிக்கொண்டு, "வழக்கம் போல் ராத்திரி குட் நைட் சொல்ல போன் பண்ணறேன். காலையில எப்பவும் வர்ற நேரத்துக்கு வந்துடறேன் என்ன?" என்று குழந்தையிடம் சொல்கிற மாதிரி சொல்லிவிட்டுக் கிளம்பினான்.

அவனது அந்த வெளிநாட்டு கார், காம்பவுண்டைவிட்டு வெளியேறுகிற வரை கையசைத்து வழியனுப்பிய பின்னர்– சடாரென்று தெரிகிற அதிகமான தனிமை உணர்ச்சியோடு அவனது தொலைபேசி அழைப்பை எதிர்பார்த்துக் காத்திருப்பாள் இவள்.

## 2

இரவு பத்தரை, பதினொன்றுக்குத்தான் தொலைபேசி அடிக்கும்.

கட்டிலில் தன் பக்கத்தில் டெலிபோனை எடுத்து வைத்துக்கொண்டு அது அடிக்காதா, அதன் மணிச் சத்தம் கேட்காதா என்று காத்திருப்பாள் இவள்.

அவன் ஒருவனுக்காகவே தான் வாழ்கிற மாதிரி அவனிடமிருந்து வருகிற அழைப்புக்காக மட்டுமே அந்த டெலிபோனும் இருப்பதாகத் தோன்றும். சிறு பெண்ணைப் போல் சட்டென்று ஒரு பொறாமை உணர்ச்சி வரும்.

'ம் ஹூம். ஏய் டெலிபோன்... நீ அவருக்காக இல்லை. அவருக்கென்று நான்தான்... நான் மட்டும்தான். புரிகிறதா? நீ எங்களுக்கு உதவுகிற சாதாரணக் கருவி. வெறும் சாதனம். அவ்வளவுதான்'– என்று சொல்லிக்கொள்வாள்.

கூடவே தன் பொறாமை உணர்ச்சியை நினைத்து சிரித்துக்கொள்வாள். அவனது அன்பை வேறு யாரும் பங்கு போட்டுவிடக்கூடாது என்கிற மனப்பான்மையை எண்ணி, 'இது எப்படி வந்தது?' என்று கேள்வி கேட்டுக்கொள்வாள்.

அவனை ராமச்சந்திர மூர்த்தியாகவும், தன்னை சீதையாகவும் நினைத்துக் கொள்வாள். தன் கடந்த கால வாழ்க்கை எப்படி இருந்தாலும், இப்போது

தான் சீதைதான் எனத் தோன்றும். அவனைச் சந்திக்காமல் இருந்திருந்தால் தனது வாழ்க்கை இப்போது எப்படி இருக்கும் என்பதை நினைத்துப் பார்க்க வைக்கும்.

வீடு என்ற பெயரில் வசித்த அந்த ஒரே அறை. மேலே ஆஸ்பெஸ்டாஸ் கூரை. அதிலும் வாடகை பாக்கிக்காக மின்சார இணைப்பைத் துண்டித்து, வாசலில் நின்று சத்தம் போடும் வீட்டுக்கார அம்மாள்.

இந்தக் கூத்தல் எதுவும் என் காதுகளில் விழாது. இந்தவீட்டுப் பிரச்சினைகளோ, பசியோ எனக்குத் தெரியாது. அவற்றுக்கும், எனக்கும் எந்தவித சம்பந்தமும் கிடையாது என்பது போல், சதா சர்வகாலமும் குடித்துவிட்டு வந்து தரையில் உருளுகிற அப்பா, இவளுக்குப்பின் இன்னும் இரு பெண்களைப் பெற்று வைத்துக்கொண்டு நாளைய சாப்பாட்டிற்கு என்ன என்று யோசிக்கிற அம்மா.

'அக்கா, இந்த மாசம் ஸ்கூல் பீஸ் கட்டலை. இன்னும் ஒரு வாரத்துல கட்டலைன்னா, பேரை அடிச்சிடுவோம்னு டீச்சர் பயமுறுத்தறாங்க...'

'அக்கா... என்னோட பாவாடை சுத்தமா கிழிய ஆரம்பிச்சுடுச்சு. இனிமே அதைக் கட்டிக்க முடியாது. வேற பாவாடை வாங்கித் தாக்கா.'

'மஞ்சு... வீட்ல மணி அரிசி இல்லை. இன்னி சாப்பாட்டுக்கு என்ன செய்யறதுன்னு தெரியலை...'

இவளுக்கும் தெரியவில்லை. படித்த எஸ்.எஸ்.எல்.சி. படிப்பிற்கு எந்த இடத்திலும் வேலை கிடைக்கவில்லை. அப்படியே வேலை கிடைத்தாலும் மாதம் முழுவதும் செய்து ஆயிரமும், இரண்டாயிரமும் சம்பளம் தந்தார்கள்.

அந்த ஒரே அறைக்கு வாடகையே எண்ணூறு ரூபாய். அதன்பின் மின்சாரக் கட்டணமென்று நூறு ரூபாய் தனியாகத்



தந்துவிட வேண்டும். மீதிப் பணத்தில் குடிப்பதற்கென்று அப்பா அடித்துப் பிடுங்கிக்கொண்டு போவது தவிர, ஒரு வாரச் சாப்பாட்டிற்குக் கூடக் காணாது.

இந்தப்பின்னணி நிலைமையில்தான் அடுத்த போர்ஷனில் தனியாக வசித்த ரஞ்சிதம்– இவளைத் தன்னைப்போல் உதிரி நடிகையாக்க முயன்றாள். அம்மாவிடம் பேசிப் பேசி சம்மதிக்க வைத்தாள்.

"இதோ பாருங்கம்மா... உங்க மஞ்சு நல்ல களையா, லட்சணமா இருக்கு. அதிர்ஷ்டம் இருந்துச்சுன்னா ஒரே படத்துக்கப்புறம் பெரிய நடிகையா ஆகிடலாம். இப்படிக் கஷ்டப்படறதைவிடப் பேசாம என்கூட அனுப்புங்க. நான் மாணிக்கம் அண்ணன்கிட்ட சொல்லி ஏதாவது 'ரோல்' வாங்கித் தரேன். ஒரு 'கால்ஷீட்'டுக்கு மூவாயிரம், நாலாயிரம்னு கிடைக்கும். சாப்பாடும் கம்பெனியே போட்டுடும். அவ சாப்பாடு வரையிலுமாவது தள்ளிக்கிட்டுப் போகுமில்ல?"

"அவ சாப்பாடு தள்ளிக்கிட்டுப் போனால், இன்னும் ரெண்டு இருக்குதுங்களே... அதுங்களை என்ன செய்யறது?"

"கார்ப்பரேஷன் ஸ்கூல்ல சேர்த்து விடுங்க. பகல் நேரத்துல வயிறு ரொம்ப சாப்பாடு போட்டுடுவாங்க. மஞ்சு கொண்டு வர்ற பணத்தை வச்சு மற்ற செலவுகளை சரிக்கட்டுங்க. என்ன, நான் சொல்றது...?"

அம்மா வந்து ரஞ்சிதம் சொன்னதை வெளியிட்டபோது இவள் பதறிப்போனாள். உடம்பில் மரவட்டை ஊறுகிற அருவருப்பு ஏற்பட்டது.

ரஞ்சிதம் பாதி நாள் ஷூட்டிங்கும், மீதி நாட்களில் ஓட்டல் அறைக்குப்போய் மறுநாள் காலை திரும்புவதும் இவளுக்குத் தெரியும். அவளை அழைத்துப் போக யார் யாரோ வருவார்கள். ஆட்டோ, சில நேரம் டாக்ஸியுமாக வரும்.

தன் தொழிலில் ரஞ்சிதத்திற்கு வருத்தம் எதுவுமில்லை. ஓரோர் சமயம் அவள் பேசுவதைக் கேட்டால் ஞானி மாதிரி இருக்கும்.

"இதப் பாரு மஞ்சு... இப்படிப் பிடிவாதம் பிடிச்சியானால் பட்டினி கெடந்து சாக வேண்டியதுதான்! அப்போ கூட நம்மை ஏளனமாகப் பார்க்கிற இத்தனை பேரில் ஒருத்தர் கூட உதவிக்கு வரமாட்டாங்க. ஒரு வேளை சோறு போடமாட்டாங்க. ஒரு டீத்தண்ணீர் வாங்கித் தரமாட்டாங்க. அதுக்கெல்லாம் முடியாதபோது, வீண் பேச்சும் முடியாமப் போகணும்.

ஆனால், வம்பு பேச மட்டும் முந்திப்பாங்க. அது இந்த ஜனங்களோட புத்தி. அதையெல்லாம் பார்த்துக்கிட்டு இருந்தால் நடக்காது. வயிறு பசிக்காமல் இருக்காது. இதுல என்ன தப்புன்னு இப்படி மறுக்கறே! அள்ளக்கூடாது திருடக்கூடாது அவ்வளவுதானே? இதுக்குப் போய் ஏன் தயங்கறே? என்னங்கம்மா நான் சொல்றது?"

"அதான் நானும் சொல்றேன். இவ என்னவோ மாட்டேன்றாளே. வீம்பு பிடிச்சு அத்தனை பேரும் சாகட்டும்னு அதுவரை பார்த்துகிட்டு இருக்கப் போறாளோ என்னவோ?"

கடைசியில் அம்மாவின் அஸ்திரம் பலித்தது. இவள் ரஞ்சிதத்துடன் போனாள்.

"மாணிக்கண்ணே... இது பேரு மஞ்சு. நம்ம கூட சேர்த்துக்கணும். எந்த வேஷமாவது தரணும். ரொம்ப கஷ்டப்படற குடும்பம்."

"அது சரி... பொண்ணு மூக்கும், முழியுமா நல்லாத்தான் இருக்கு. ஒரு அதிர்ஷ்டம் அடிச்சுன்னா பெரிய நடிகையானாலும் ஆயிடும். அதுக்கு முன்னால இந்தத் தொழில்னு வந்துட்டா 'அட்ஜஸ்ட்' பண்ணிக்கத் தயாரா

இருக்கனும்னு சொல்லிட்டியா?"

"சொல்றதென்ன... எல்லாம் தானே தெரிஞ்சுக்கறா."

"படிச்ச பொண்ணு மாதிரி தெரியுது."

"ம்... படிச்சு என்ன பிரயோஜனம். யார் வேலை தராங்க?"

"சரி, இன்னிக்கு படத்துல குரூப் டான்ஸ் இருக்கு. அதுக்கே சேர்த்துக்கறேன். டான்ஸ் கீன்ஸ் ஆடுமா...?"

"ஆமா... நாங்கள்ளாம் பரத நாட்டியம் ஆடப் போறோம் பாரு. நாங்க செய்யற கை– கால் ஆட்டல், உடம்பை வளைத்தலை இவளும் செய்யறா..."

அன்றுதான் முதல்முறையாக 'மேக் அப்' போட்டாள். உடை என்ற பெயரில் மார்பில் ஜிகினா வைத்துத் தைத்த கச்சையும், கீழே முட்டி அளவில் பாவாடை மாதிரியும் ஒன்று தந்தார்கள்.

இவள் கூசிப்போனாள். உள்ளுக்குள் குமைந்துபோனாள்.

அந்த உடை அணிந்து– அத்தனை பேர் எதிரில் ஆடுகிற அவலத்திற்கு பட்டினி கிடந்து செத்துப்போவது மேல் என்று தோன்றிற்று.

சொன்னால் அம்மா ஒப்புக்கொள்ள மாட்டாள். இவள் மீது சிடுசிடுவென்று பாய்வாள். நெருப்பு மாதிரி வார்த்தைகளால் சுடுவாள்.

'நாங்க அத்தனை பேரும் செத்தாத்தான் ஒனக்கு நிம்மதி இப்படி தான், தன் உடம்புன்னு சுய நலமா பார்த்துக்க ஒன்னைப் பெத்ததுக்கு உலக்கையை பெற்றிருக்கலாம். பெரிய இவ... இவளுக்கு யாரோ கண்ணியமா ஒரு வேலையை வச்சிக்கிட்டு காத்துட்டிருக்கான் பாரு. இத்தனை நாள் வேலை வேலைன்னு சொல்லி பொழுதை ஓட்டினது போதாது...?



பசி, பசின்னு கூடப் பொறந்ததுங்க தவிக்குதுங்க. ஒனக்கு நீதான் பெரிசாப் போயிடுச்சு. ஒன்னோட எண்ணம்தான் பெரிசாயிடுச்சு. இந்த ரெண்டுல ஒண்ணு, உன் வயசுல இருக்கக் கூடாது? அதையெல்லாம் நடிக்கப் போடின்னால், என் பேச்சைத் தட்டாமச் போகுங்க. நாலு காசு கொண்டு வரும். அம்மா– தங்கைங்க பசியாற்றுவம்னு நினைக்குங்க. ஆனா நீ... அடமும், பிடிவாதமுமா அழும்பு பிடிச்சுட்டு நிக்கறே...'

– இப்படி கொட்டிக் கொட்டி அம்மா இவள் மனதை மாற்றி அனுப்பி இருக்கிறாள்.

இப்போது இந்த உடையைப் போட்டுக்கொள்ள மறுத்து வெளியேற்றப்பட்டால், நிச்சயம் கோபிப்பாள். வெறும் கோபமாக மட்டும் இருக்காது. மடேர் மடேரென்று தலையில் அடித்துக்கொண்டு அழுவாள். வெறி பிடித்த மாதிரி இவளை அடிக்க ஓடி வருவாள்.

பின் தன் இரு பிள்ளைகளுக்கும் அரளி விதையை அரைத்துக் கொடுத்து, தானும் சாப்பிடப் போவதாக பயமுறுத்துவாள். வெறும் பயமுறுத்தல் என்று அதை எடுத்துக்கொண்டுவிட முடியாது. மித மிஞ்சிய நிலையில் செய்தாலும் செய்வாள்.

பசி பொல்லாதது. எதையும் செய்யத் செய்யத் தூண்டுவது. இரண்டு நாள் உணவின்றி இருக்க நேரிடுமானால், மூன்றாம் நாள் உணவும் நிச்சயமில்லை என்கிற ஒரு நிலை வருமானால்தான் அம்மாவைப் புரிந்துகொள்ள முடியும். இவள் புரிந்து கொண்டாள், பாவம் அவள்! அவளால் மட்டும் வேறு என்ன செய்ய முடியும்...?

இவள் கண்களை மூடிக்கொண்டாள்.

தன் இயலாமையை நினைத்தபோது, கண்ணோரம் நீர் துளிர்த்தது. அதற்குள் பரபரவென்று உடைமாற்றி, சிறிது கூடத் தயக்கமின்றி எதிரில் வந்து நின்ற ரஞ்சிதத்தை ஏறிட்டபோது–

அவள் கேட்டாள்.

"என்ன பார்க்கறே...?"

"இல்லேக்கா... இதைப் போட்டுக்கிட்டு இத்தனை பேர் எதிர்லயும் எப்படிக்கா நிக்கறது...?"

"நிக்கறதா? சும்மா யாரு நிக்கப் போறாங்க...? உடம்பை வளைச்சு குலுக்கி டான்ஸ் இல்ல ஆடப் போறோம்..."

"ஐயோ... என்னக்கா இது! எப்படிக்கா முடியும்?"

"ஏன், எங்களால முடியலையா? நாங்க மனுஷங் இல்லையா?"

"ஐயயோ... அப்படிச் சொல்லலேக்கா..."

"பதறாத...! ஒரு பேச்சுக்குச் சொன்னேன். சீக்கிரம போட்டுக்கிட்டு வா. நேரமாச்சுன்னால் அஸிஸ்டெண் டைரக்டரு வாயில் வராத வார்த்தையெல்லாம் சொல்லி திட்டுவாரு. இதுக்கே இத்தனை கூச்சப்படற நீ... அதை கேட்டால் நாக்கைப் பிடுங்கிக்கிட்டு செத்தே போயிடுவே போல இருக்கு..."

அந்தக் கொதிக்கும் வெயிலில், கடற்கரை மணலில், காலி செருப்பு கூட இல்லாமல் சூடு தாங்காமல்– பாதங்களை மாற்றி மாற்றி வைப்பதே ஒரு நடனமாகத் தோன்ற– வெறு மார்புக் கச்சையும், குட்டைப் பாவாடையும் தந்த அவலமு அலங்கோலமும் அதைவிடத் தாங்க முடியாத தகிப்பா நெஞ்சைச்சுட– இவளும் மற்றவர்களோடு குதித்தபோது அந்த உதவி இயக்குநரின் குரல் கேட்டது.

"யாரும்மா அது... இடப்பக்க வரிசையில நாலாவ பொண்ணு? ஆட வராதா...? வெளிச்சத்துல காமிர முன்னால ஆடுன்னால் ஆடமாட்டீங்க. இருட்டுலதா ஆடுவீங்க போல இருக்கு. என்னய்யா மாணிக்கம்... யார் இந் பெண்ணு! புதுசா இப்பத்தான் காமிரா பார்க்குதா...?"



மாணிக்கம் ஓடி வந்தான்.

பவ்வியமாக நின்று பதில் சொன்னான்.

"ஆமாங்க! இன்னிக்குத்தான் சேர்ந்திச்சு. ஏய் மஞ்சு... பார்த்து செய்யி... சாருக்குக் கோபம் வருது பாரு...."

"மாணிக்கம், பேரு என்ன சொன்னே?"

"மஞ்சு– மஞ்சுளா தேவின்னு நினைக்கிறேன்."

"இளசா தெரியுது...?"

"இளசுதாங்க. இருபதாகலை இன்னும்."

"எல்லாத்துக்கும் புதுசு மாதிரி படுது...?"

"புதுசுதாங்க..."

"அதான் இப்படி மருண்டுக்கிட்டு நிக்குது. சரி... ஷூட்டிங் முடிச்சு ராத்திரி எட்டு மணிக்கு மேல என்னை ரூமுல வந்து பார்க்கச் சொல்லு..."

"சரிங்க."

"இப்ப எங்க ரூம் போட்டிருக்கேன் தெரியுமில்ல...?"

"தெரியுங்க..."– பெயரைச் சொன்னான்.

"இல்லடா முண்டம், விக்டோரி. திரீ நாட் ஒன்..."

"சரிங்க."

பகல் முழுவதும் உடம்பில் ஆற்று வெள்ளமாக வியர்வை வழிய– கண்களும், முகமும் எரிய– கொதிக்கிற மணலில் உடம்பைப் புரட்டி எடுத்துவிட்டு, வீட்டிற்குத் திரும்பி அன்றைய ரூபாயை அம்மாவிடம் கொடுத்து– உடம்பு, மனசு இரண்டின் அருவருப்புப் போக குளித்துவிட்டு வந்தால்– ஏழரை மணிக்கெல்லாம் மாணிக்கம் வந்து நின்றான்.

"என்ன மாணிக்கம், ஷூட்டிங் முடியலே?"– ஒரு நாள் அறிமுகத்தில் வெகுநாள் பழகின மாதிரி அம்மா அவனைப் பெயரிட்டுக் கூப்பிட்டுக் கேட்டாள்.

"இல்லேம்மா, பாப்பாவைக் கூட்டியாறச் சொன்னாரு அஸிஸ்டெண்ட் டைரக்டரு."

அம்மா ஒரு விநாடி யோசித்தாள்.

"இதுக்குத் தனியா காசு தந்துருவாரில்ல?"

"காசு தராரோ இல்ல அடுத்த படத்துல ஒரு சான்ஸ் தராரோ... தெரியலீங்களே."

"ரெண்டுல ஏதாவது ஒண்ணு நிச்சயம் கிடைக்குமில்ல?"

"ம்...."

அம்மா இவளைக் கூப்பிட்டு, மாணிக்கத்தோட போகச் சொன்னாள்.

இவள் துடித்துத் துவண்டு போய் மறுக்க, அம்மா மூர்க்கமானாள்.

"முக்காடு போட்டுக்கிட்டு நனைஞ்ச கதையா இது என்னடி பிடிவாதம்? சினிமாவில நடிக்கிறதுக்குன்னு போயாச்சு. அப்புறமா இதுக்கு மாட்டேன்னால் எப்படி- ம்... கிளம்பு சீக்கிரம். நீயே கொண்டாந்து உட்டுடுவே இல் மாணிக்கம்...?"

"காலையில இருட்டு வெலகறதுக்கு முன்னா கொண்டாந்து உட்டுடமாட்டேனா!"

இவளது கனவுகளும், அடிமன ஆசைகளும், எல்லா பெண்களையும் போல் கல்யாணம் செய்துகொண்டு- கணவன்- குழந்தைகள்- குடும்பம்- வீடு என்று வாழ நினைத் வாழ்க்கையும் இன்றுதான் முதல் முறையாக நொறுங்கி போயிற்று.

எல்லாக் கனவுகளும் கலைந்து கற்பனைகள் சிதறி...

இதுதான் நிஜம், நடைமுறைக்கு உள்ள வரையி

இதுதான் சாத்தியம்- பசி உள்ள குடும்பத்தில் பிறந்தவளுக் எப்படியாவது அந்தப் பசியைத் தணித்துக்கொண்டா



போதும் என்கிற அம்மாவிற்கும்- குடும்பப் பொறுப்பற்ற குடிகார அப்பாவிற்கும் பிறந்த பின்பு-

கல்யாணம் என்பது வெறும் கனவு.

குடும்பம் என்பது வீண் கற்பனை.

வீடு, குழந்தைகள் என்பதெல்லாம் அடைய முடியாத இமாலய ஆசைகள்.

வீடு திரும்பிய பின் இவள் குமுறிக் குமுறி அழுதாள். தனியல் அறையின் கதவை மூடிக்கொண்டு வாய்விட்டுக் கதறினாள்.

'கடவுளே, எனக்கு ஏன் இப்படிப்பட்ட வாழ்க்கையைக் கொடுத்தே! அன்பும், பாசமும், ஆசையும் நிறைந்த ஒரு வாழ்க்கைக்கு ஏங்கினவளை எதற்காக இந்த இடத்திற்கு தள்ளிவிட்டே? கணவன்- குழந்தை என்று குடும்ப வாழ்க்கை வாழ நினைத்தவளுக்கு ஏன் இந்தத் தண்டனை? இதற்கு நான் பண்ணின தப்பு என்ன... குற்றம் என்ன?'

குடித்தனக்காரர்களில் ஒருவர் வந்து கதவைத் தட்டுகிற வரை அழுது முடித்தாள்.

அதுதான் அவள் அழுத கடைசி அழுகை. அதன் பின்னர் உடம்பும், மனசும் மரத்துப் போயிற்று.

மறக்கிற கலையைக் கற்றுக்கொண்டு- சம்பாதித்துப் போடுகிற வெறும் இயந்திரமாக இயங்கியபோதுதான்- இவளது வாழ்க்கையில் குறுக்கிட்டான் சந்திரசேகரன்.

## 3

அன்று சந்திரசேகரனின் தொழிற்சாலையில் படப்பிடிப்பு.

டைரக்டரும், அவனும் நெருங்கின சிநேகிதம் என்பதா
ஒப்புக்கொண்டிருந்தான். தொழிற்சாலையினுள் போராட்ட
நடப்பது போலவும், அதில் வேலை செய்கிற தொழிலாளர்க
வெளியே ஓடுவது போலவும் காட்சி.

காலையில் இருந்து சந்திரசேகரன் கூடவே இருந்தா
அடிக்கடி டைரக்டரிடம், 'ஏதாவது உதவி வேண்டுமா
என்று கேட்டுக்கொண்டிருந்தான்.

நல்ல கம்பீரமும், பரம்பரைப் பணக்காரக் களைய
தெரிந்தது. கதாநாயகியாக நடித்த புகழ் பெற்ற அந்த நடி
போய் அருகில் உட்கார்ந்துபேசியபோது கூட அதிகம் பேசா
தள்ளி நிறுத்துகிற வித்தையைத் தெரிந்துவைத்திருந்தான்.

அத்தனை பேர்களுக்கு நடுவில் மிகவு
வித்தியாசமானவனாக– பணக்கார ஆடம்பரமும், கர்வமு
சிறிதுகூட இன்றி, உதவி செய்யத்தான் நான் இருக்கிறே
மற்றபடி இதற்கும், எனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்
என்கிற பாவனையில் சற்று ஒதுங்கி உட்கார்ந்திருந்தவன
இவளும் பார்த்தாள்.

'எவ்வளவு கம்பீரமாக இருக்கிறான்' என்
நினைத்துக்கொண்டாளே தவிர, அதற்கு மேல் வேறு
எண்ணமும் எழாதவாறு வேலை குறுக்கிட்டது. இ
படத்தில் இவளுக்கு ஒரு வரி வசனமும் தரப்பட்டது.

கூட்டத்தோடு கூட்டமாக இவள் ஓடி வருகிறபே
போராட்டக்காரர்களில் ஒருவன் வீசி எறிகிற கல் இவ
நெற்றியில் பட்டு ரத்தம் கொட்டும். அதை ஒரு விநா
'குளோஸ் அப்'பில் காட்டுவார்கள்.

நாலைந்து முறை ஒத்திகை பார்த்த பின்– இவள் அடிப
காட்சி எடுக்கப்பட்டது. 'சைலன்ஸ்' சொல்லி, 'கி
அடித்து, காட்சி எண் குறிக்கப்பட்டதும் 'ஆக்ஷன்' எ
டைரக்டரின் குரல் கேட்டது.



'காமரா' ஓடத் தொடங்கிற்று.

இவள் மற்றவர்களோடு பதற்றத்துடன் உள்ளே இருந்து ஓடி வந்து போதுதான், அது நிகழ்ந்தது. ஓடி வந்த வேகத்தில் கல் அடிக்குப் பதிலாக கால் இடறி கீழே விழுந்த வேகத்தில், முன் நெற்றி எதன் மீதோ பட்டு நீளமாக சதை கிழிந்து ரத்தம் கொட்டத் தொடங்கிற்று.

அதைப் பார்த்த மற்றவர்கள்– ஓடுவதை நிறுத்திவிட, 'கட்' என்று சத்தம் போட்ட டைரக்டரின் குரலில் மகாக் கோபம் தொனித்தது. அருமையாகப் படமாகிக் கொண்டிருந்த காட்சி இவளால் தடைபட்டதில் எழுந்த எரிச்சலோடு பேசினார்.

"ஓடத் தெரியாதவங்கல்லாம் ஏன் வந்து உயிரெடுக்கறீங்க? மனசுக்குள்ள பெரிய ஹீரோயின் என்கிற நினைப்பு போல. சரியா ஓடி வர்ற துப்பு இல்லே... யார் வீட்டு பிலிம்னு நினைச்சுட்டிருக்கே? உங்க அப்பன் வீட்டு காசா, உனக்காகவெல்லாம் இன்னொரு 'டேக்' எடுத்து பிலிமை வீணாக்க முடியுமா? எழுந்திரிச்சு சீக்கிரம் வெளியே போ. எத்தனை தைரியமா இன்னும் அப்படியே படுத்துக் கிடக்கற?"

ரத்தம் கொட்டின முன் நெற்றியை– புடவைத் தலைப்பால் அழுத்திக்கொண்டு இவள் அந்த இடத்தைவிட்டு எழுந்திருக்க முடியாமல் எழுந்தாள். உடம்பும், நெஞ்சும் பதற– மன்னிப்புக் கூட்க வாய் எழும்பாமல் மெல்ல அந்த இடத்தைவிட்டு வெளியே வந்துபோது அழுகை வந்தது.

இவளுக்கு பதிலாக வேறொரு பெண்ணை ஓடச் சொல்லி டைரக்டர் படமாக்கிவிடுவார் என்பது தெரிய, அந்த அழுகை எண்ணமும் அதிகமாயிற்று.

நெற்றி வலியோ, கொட்டும் ரத்தமோ பெரிதாகப்படாமல்– 'கின்றைய இழப்பான சொற்ப ரூபாயில் மனசு நிற்க– அவள் தனியாக ஒதுங்கி மரத்தடி ஒன்றின் கீழ் உட்கார்ந்தபோது–

சந்திரசேகரன் அங்கு வந்தான்.

அவள் எதிரில் நின்று,

"இன்னும் ரத்தம் வருதா?" என்று கேட்டதும் சடாரென்று கண்களைத் திறந்தவள், அவனைப் பார்த்ததும் பதறி எழுந்து நின்றாள்.

"நீங்க ஏன் எழுந்திருக்கணும்? உட்காருங்க. முதலுதவிப் பெட்டி கொண்டுவர சொல்லி இருக்கேன். முதல்ல ரத்தம் நிக்கக் கட்டுப் போட்டுக்குங்க. அப்புறம் ஒரு டாக்டரைப் பார்க்கலாம்."

"ஐயோ... டாக்டரெல்லாம் வேணாங்க! இதெல்லாம் எங்களுக்கு ரொம்ப சகஜம். இந்த மாதிரி நிறைய அடிபட்டுக்குவோம். ரத்தம் வரும், ஒரு துணியை கிழிச்சுக்கட்டிக்கிட்டு மறுநாளே ஷூட்டிங்குக்குப் புறப்பட்டு போவோம்."

அவன் பதில் ஒன்றும் சொல்லாமல், அவளைப் பார்த்துக்கொண்டு நின்றான்.

அந்தப் பார்வையின் மென்மை, மனிதத்தன்மை எல்லாம் இவளது அடி மனதைத் தொட– உருகிப் போய் நின்றாள்.

'எப்படிப்பட்டவன் இவன்! ஒரு பெரிய தொழிலதிபர் ரூபாய் நோட்டை எரித்துக் குளிர் காய்பவன். தான் ஒரு உதிரி நடிகை. அவனெதிரில் நிற்கிற தகுதிகூட அற்றவள். அப்படிப்பட்டவளுக்கு அடிபட்டதென்று விசாரிக்க ஓடி வந்திருக்கிறான் என்றால்... மதிப்பும், மரியாதையுமாய் பேசுகிறான் என்றால்...

எவ்வளவு உயர்ந்த மனிதன்!

அதோடு விடவில்லை அவன். டாக்டர் வீட்டிற்குத் தானே அழைத்துப் போய்– கட்டுப் போட்டு, அந்தக் காயம் சீழ் பிடிக்காமல் இருக்க ஊசி போட்ட பின்– மீண்டும்



தன் காரிலேயே ஏற்றிக் கொண்டு வந்தபோது– மெதுவாகக் கேட்டான்.

"உங்க சினிமா உலகத்துல பணத்தைத் தவிர வேறு எதற்குமே மதிப்பு இருக்காதோ?"

அவன் ஏன் அதைக் கேட்கிறான் என்பதைப் புரிந்துகொண்டு மென்மையாகப் புன்னகை செய்தாள் அவள்.

"அன்பு, பாசம் இதெல்லாம்கூட வேணாம். சாதாரண மனுஷத்தனம் கூடவா இல்லாமப் போகும்?"

"ஏன் அப்படிக் கேட்கறீங்க?"

"ஒரு பொண்ணுக்கு அடிபட்டு ரத்தம் கொட்டுது. அதுக்குக் கவலைப்படாமல், ஷாட் வீணாய்ப் போச்சு... ஃபிலிம் வீணாய்ப் போச்சுன்னு கத்தறானே. இப்படித்தான் எல்லோரும் நடந்துப்பாங்களா?"

"இல்லீங்க. அடிபட்ட ஆள் யாருன்றதைப் பொறுத்தது. அதுவே ஹீரோயினுக்குப் பட்டிருந்தால் இப்படியா இருப்பாங்க? 'செட்'டே பதறிப் போயிருக்கும்."


"ஓஹோ... மனுஷ ரத்தத்துல கூட ஹீரோயின் ரத்தம், துணை நடிகை ரத்தம்கிற வித்தியாசமெல்லாம் இருக்கா? பாசிட்டிவ், நெகடிவ், ஓ குருப்– இதெல்லாம் மட்டும்தான் இருக்குன்னு நினைச்சிட்டிருக்கேன்."

அவள் கண்களில் நீர் துளிர்த்தது. நெகிழ்ச்சியாய் வார்த்தைகள் வந்தன.

"எனக்குத் தெரிஞ்சு என்னை மனுஷத்தனமா பார்த்து– மரியாதையாய் மதிச்சு நடத்தின முதல் மனிதர் நீங்கதான்."

"........"

"எங்களை மாதிரி... கூட்டத்துல கோவிந்தா போடற நடிகைகளுக்கு மான, அவமானம், மதிப்பு, மரியாதை எதுவும் இருக்கக் கூடாதுன்றது மற்றவங்க நினைப்பு. ஏன்...





எங்களுக்கெல்லாம் மனசுன்னு ஒண்ணு உண்டுன்றதை ஒட்டு மொத்தமா எல்லாரும் அவங்க வசதிகளுக்கு ஏற்ப மறந்தாச்சு."

"அப்ப ஏன் இந்தத் துறைக்கு வந்தீங்க?"

"இஷ்டப்பட்டு வரலை. பசி! வீட்டுல அம்மா, தங்கைங்க பட்டினி கிடந்தப்போ– எனக்காகத் திறந்து வைச்சிருந்த ஒரே கதவு இது."

"வேற வேலை எதுவும் கிடைக்கலையா?"

"கிடைச்சிருந்தா இங்கே வந்திருப்பேனா?"

அவன் சிறிது நேரம் பேசாமல் இருந்து– பின்னர் தன் கேள்வியைத் தொடர்ந்தான்.

"உங்களுக்கு அப்பா இல்லையா?"

"இருக்கார். இருந்தும் இல்லாதவரா– குடிச்சிட்டு மூலையில சுருண்டுக்கிட்டு இருப்பார்."

"வேற சம்பாதிக்கிற ஆம்பிளைகள் இல்லையா?"

"இருந்தால் நான் ஏன் இப்படி இருக்கேன்?"

"உங்களுக்கு இது பிடிக்கலையா?"

"எது?"

"இப்படி நடிக்க வர்றது?"

அந்த ஒரு கேள்வி அவளுக்குப் போதுமானதாக இருந்தது.

இதுவரை யாரும் அவளிடம் இப்படி கேள்வி கேட்டதில்லை. அனுசரணையாகப் பேசினதில்லை. அன்பாக ...ந்து கொண்டதில்லை.

இவன்தான் முதல் முதலாக இவளை மதித்து பேசுகிறான். ...ண் என்கிற கவுரத்தோடு பார்க்கிறான். மற்றவர்களின் ...ர்வையில் 'எக்ஸ்டிரா' என்றவுடன் வெளிப்படுமே... அந்த ...னமில்லை. கை சொடுக்கலுக்கு ஓடிவர வேண்டுமென்ற

எண்ணமில்லை. புடவைக்கு அப்பால் பார்க்கிற பார்வையில்லை!

மரியாதையாய், கண்ணியமாய், பெருந்தன்மையாய்... தன்னோடு சரிசமமாய் காரில் உட்கார வைத்து, முதல் முறையாகத் தன் வாழ்க்கையில் ஒரு மனிதனை சந்தித்த உணர்ச்சிப் பெருக்கில்– மனசு படீரென்று திறந்துகொண்டது.

அத்தனை நாட்களாக அடைந்து கிடந்த துன்பம், துக்கம், ஆற்றாமை எல்லாம் வெளிப்பட்டன. ஒவ்வொன்றாய் தான் நடிகை ஆக்கப்பட்ட துயரம், மாணிக்கத்தோடு அனுப்பப்பட்ட விவரம், அப்புறம் மாணிக்கமற்று அம்மாவே விரட்டின அனுபவங்கள் என்று எல்லாவற்றையும் சொல்லிவிட்டுக் கண்களில் நீர் வழியக் கேட்டாள்.

"குபுத்ரோ ஜாயேத க் வசிதபி குமாதா ந பவதி– அப்படீன்னு கேள்விப்பட்டிருக்கீங்களா? கெட்ட பிள்ளைகள் இருக்கலாம். ஆனால், கெட்ட தாயார் மட்டும் உலகத்தில் இருக்கவே முடியாதுன்னு சொல்வாங்க. என் விஷயத்துல அதுகூடப் பொய்யாய் போச்சு பார்த்தீங்களா?"

அவள் தாங்க முடியாதவளாக அத்தனை நாள் துக்கத்திற்கும் அன்று ஒரு வடிகால் கிடைத்த காரணத்தால், மனதில் இருந்த அத்தனையும் மடமடவென்று கொட்டிவிட்டாள்.

இவன் அந்நியன், மதிக்கத்தக்கவன், பொருளாதார நிலையில் எங்கோ எட்டாத உயரத்தில் நிற்பவன், தான் இதையெல்லாம் பேசக்கூடிய தகுதியில் அவன் இல்லை என்கிற எல்லாம் மறந்து– கேள்வி கேட்டதில் மொத்தமா வெளிப்பட்டு விட்டது.

சொல்லிவிட்டு அவள் குமுறிக்குமுறி அழ...



அவன் அமைதியாக இருந்தான். மனசில் இருக்கும் துக்கமெல்லாம் அடித்துக்கொண்டு போகிற வரை அவள் அழுது முடிக்கட்டும் என்று பேசாமல் இருந்தான்.

பின்னர் மெல்ல அவளது கேவல்களும், விசும்பலும் குறைந்து கொண்டே வர– புடவைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக்கொண்டு தலை நிமிர்ந்தபோதுதான் சடாரென்று அவள் மனசிற்கு உறைத்தது.

'மரியாதைப்பட்ட இந்த மனிதருக்கு எதிரில் இத்தனையும் சொல்லி, இப்படி அழுது கொண்டிருக்கிறோமே என்கிற உணர்வு தோன்ற– அதனால் ஏற்பட்ட பயத்திலும், பதற்றத்திலும் தலையைக் குனிந்துகொண்டு சொன்னாள்:

"ஐயம் ஸாரி. நீங்க என்னை மன்னிக்கணும்."

"எதுக்கு?"– மிகச் சாதாரணமாகக் கேட்டான் அவன்.

"இப்படி எல்லாத்தையும் உளறி, கட்டுப்பாடு இல்லாமல் அழுததுக்கு"

அவன் மெதுவாகப் புன்னகை செய்தவாறு பேசினான்.

"நியாயமாகப் பார்த்தால் நான்தான் 'ஸாரி' சொல்லணும். நீங்கதான் என்னை மன்னிக்கணும்."

"ஐயோ, என்ன நீங்க?"

"ஆமாம். கேள்வி கேட்டு ஏற்கெனவே புண்ணாகி இருந்த மனசை இன்னும் ரணப்படுத்திட்டேனோன்னு வருத்தமா இருக்கு."

"ஐயயோ... அதெல்லாம் ஒண்ணுமில்லை. இதுவரை நான் யார்கிட்டேயும் அப்படிப் பேசினதில்லை. எல்லாத்தையும் சொன்னதில்லை. சொல்கிற மாதிரி யாரும் என்கிட்டே ...துக்கவும் இல்லை."

"ஓ...அப்படின்னால் நான் கேட்டதில் உங்களுக்கு எந்தவித வருத்தமும் இல்லேன்னு சொல்றீங்களா?"

"நான்தான் என் மனசுல இருந்த பாரத்தையெல்லாம் கொட்டி உங்களை வருத்தப்படுத்திட்டேன்னு நினைக்கிறேன்."

"வருத்தமா இருக்கிறது வாஸ்தவம். ஆனால், அந்த வருத்தம் உங்களுக்கு ஏன் இப்படியெல்லாம் நேரணும் என்பதில் ஏற்பட்டதுதான். ம்... நிஜமாகவே உங்களுக்கு இந்தத் தொழில் பிடிக்கலைன்னால் நான் ஒண்ணு சொல்றேன். கேட்கறீங்களா..."

"சொல்லுங்க."

"தொழிற்சாலையில் உங்களுக்கு ஒரு வேலை போட்டுத் தரச் சொல்றேன், செய்றீங்களா?"

"நிஜமாவா சொல்றீங்க?"

அவள் அவனே எதிர்பார்க்காத வகையில் சடாரென்று குனிந்து, அவன் கால்களைத் தொட்டு கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

"ஐயோ, என்ன இது?"– பதறிப் போனான் அவன்.

"தெய்வம் சில நேரத்துல மனுஷ ரூபத்தில் வரும்னு கேள்விப்பட்டிருக்கேன். இப்பத்தான் நேர்ல பார்க்கறேன்."

"ஓ... நீங்க நினைக்கிற மாதிரி நான் தெய்வமெல்லாம் இல்லை. சாதாரண மனுஷன். எல்லார் மாதிரியு ஆசாபாசங்கள் நிறைஞ்ச சாதாரண மனுஷன்."

"ஆசாபாசங்கள் இருக்கிறதில் தப்பு இல்லையே ராமனுக்குக்கூட ஆசாபாசம் இருந்ததுன்னு ராமாயண சொல்லலையா?"

"இல்லை."

"இல்லையா?"

"நிச்சயமா இல்லை."

"அப்படின்னா அது சரின்னு சொல்றீங்களா?"

"அந்தப் பொண்ணு மனசும் அதே நாட்டத்தி



இருந்ததுன்னால் எப்படித் தப்பாகும்?"

"அதை எப்படித் தெரிஞ்சுக்கறது?"

"நேர்ல பார்த்து கேட்டுடுங்களேன்."

"அப்படின்னால் கேட்கலாம்னு சொல்றீங்களா?"

"தாராளமா."

"ஏற்கெனவே கல்யாணமானவன் அதைச் செய்யலாமா?"

"அதைச் செய்ய வேண்டிய காரணம் என்னன்னு பார்க்கணும்."

"காரணம் இருந்தால் சரின்ற வார்த்தை வருமா?"

"கேட்டுப் பாருங்களேன்."

"உங்க பேர் என்ன?"

"மஞ்சு."

"அப்படின்னால் கேட்டுடுறேன். மஞ்சு– ஐ லவ் யூ... டூ யூ லவ் மீ...?"

இப்படித்தான் ஆரம்பமாயிற்று. அன்று அவன், அவளை வீட்டு வாசலிலேயே இறக்கிவிட்டுப் போனான்.

"நாளைக் காலையில சரியா ஒன்பது மணிக்கு வரேன். ரெடியா இருங்க" என்றான்.

மறுநாள் அவளைத் தொழிற்சாலைக்கு அழைத்துப் போகாமல், அம்பத்தூர் அருகில் பெரிய தோட்டமாகக் கிடந்த இடத்தின் நடுவில் அழகாய் சின்னதாய் கட்டப்பட்டிருந்த வீட்டிற்கு அழைத்துப் போனான்.

"இது நம்ம தோட்டம். இங்க ஏன் அழைச்சிட்டு வந்தேன் தெரியுமா? உங்ககிட்ட கொஞ்சம் பேசணும்."

அவன் முடிப்பதற்குள் இவள் குறுக்கிட்டாள்.

"இன்னும் எதுக்கு மரியாதையெல்லாம்?"



"என்ன சாமி... உங்களை உள்ளே தள்ளிட்டாங்க?"

"பக்தையுடன் கொஞ்சம் பழகி பார்த்தேன், அதான்."

*– எஸ். பாலசுப்ரமணியன், சென்னை.*




"அது டாக்டர்பிணம். தனியா போகமாட்டேங்குது?"

"எதுக்காம்?"

"நர்சும் வரணுமாம்."

*– மு.ரா. பாலாஜி, கோலார் தங்கவயல்.*



"திருடன் கதவைத் தட்டினதும் ஏன் திறந்தீங்க?"

"பொண்ணுக்கு கதவை தட்டிக்கிட்டு மாப்பிள்ளை வருவா ஜோதிடர் சொன்னதை நம்பி மோ போயிட்டேன் சார்...!"

*– சீர்காழி ரேவதி.*



"இல்லே... பேச வேண்டியதெல்லாம் பேசி, சொல்ல நினைக்கிறதைச் சொல்லிடறேன். அதுக்கப்புறமும் உங்களுக்கு சரின்னு பட்டதுன்னால், அப்புறம் மாற்றிக்கறேன்... என்ன?"

"இனிமே நீங்க எது சொல்றீங்களோ அதுதான் எனக்கு வேத வாக்கு."

"இருங்க. அவசரப்படாதீங்க. முழுசா கேட்டுட்டு சொல்லுங்க. உங்களைப் பத்தி நீங்க எல்லாத்தையும் சொல்லிட்டீங்க. என்னைப் பற்றி தெரிஞ்சுக்க வேணாமா?"

"ம்ஹூம்... வேணாம்."

அவள் உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டு எழுந்து வந்து–அவன் காலடியில், தரையில் உட்கார்ந்துகொண்டாள். அவனது பாதங்களை இழுத்து தன் மடி மீது வைத்து, முழங்காலில் தலையை சரித்துக்கொண்டு சொன்னாள்.

"நிஜமாகத்தான் சொல்றேன். நீங்க என்கிட்ட பிரியமா இருக்கிங்க; என்னை– என் மனசைப் புரிஞ்சுக்கிட்டு இருக்கீங்கன்றதைத் தவிர வேற எதுவும் தெரிய வேணாம். என் மீது அன்பு செலுத்த ஒருத்தர் இருக்காருங்கறதே போதும்! அதைத் தவிர வேற என்ன வேணும்... சொல்லுங்க?"

அவளது செய்கையும், வார்த்தைகளும் தந்த இதத்தில்


## ராணி முத்து சந்தா விவரம்

| | |
|---|---|
| இரண்டு ஆண்டு | ரூ. 275 |
| ஒரு ஆண்டு | ரூ. 150 |
| ஆறு மாதம் | ரூ. 80 |

### வெளிநாடுகள்

| | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 1225 |
| ஆறு மாதம் | ரூ. 615 |

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மேலாளர்,
'ராணி முத்து',
சென்னை–600 007.




பெ–2

கண்களை மூடிக்கொண்டான்.

அவளுக்கு எப்படி இந்த அனுபவம் புதிதோ... அதே மாதிரி அவனுக்கும் புதிதுதான். வித்தியாசமான உணர்வுதான். இதைப்போன்ற மனமொத்த அன்பைத் தேடி அலைந்தவன்தான்.

மனைவி புவனாவிடம் இருந்து பெற முடியாமல் போன தோழமையை, இதத்தைத் தேடி ஒவ்வொரு பெண்ணாய் ஏமாந்தவன்தான். இவனது பணத்திற்காக இவனை நேசித்தவர்கள் அநேகம். நேசித்தவர்கள் என்பதைவிட, நேசிக்கிற மாதிரி பாவனை காட்டியவர்கள்தான் அனேகம்.

தன்னைத் தனக்காக விரும்பக் கூடிய ஒரு மனதை- இதமான சிநேகிதத்தை – துணையை – ஐக்கிய மனப்பான்மையை எதிர்பார்த்து, அப்படி ஒருத்தியை சந்திக்கப் போவதே இல்லை; கிடைக்கப் போவதில்லை என்கிற முடிவிற்கு வந்து- இயந்திரமாக இயங்கிக்கொண்டிருந்த வாழ்க்கை அவனுடையது.

இப்போது இப்படிப்பட்ட ஒரு அன்பை, பிரியத்தை அவள் காட்டியதும் உருகிப் போனான். அவளைப் போலவே இதைத் தவிர வேறு என்ன வேண்டும் என்று தோன்ற மெல்ல அவளது தலையை வருடியவாறு குரல் கரகரக்க பேசினான்.

"மஞ்சு... நாம ரெண்டு பேரும் ஒத்த சிந்தனையில், ஒ படகுல போறதா நினைக்கிறேன். இந்த மாதிரி ஒரு மனசை தேடி நீங்க அலைஞ்ச மாதிரி, நானும் அலைஞ்சிருக்கேன் வீடு, வாசல், பெண்டாட்டி, தோளுக்கு மீறி வளர்ந் பொண்ணு எல்லாம் இருந்தும்- எதுவும் இல்லாத மாதி தவிச்சிருக்கேன்.

என் மனைவி புவனாவுக்கு அழகா இருக்கத் தெரியு



பணத்தைப் பாதுகாக்கத் தெரியும். தன்னுடைய அந்தஸ்தைக் காப்பாற்றிக்கத் தெரியும். தெரியாதது- மனுஷ மனசு, அதுவும் என்னோட மனசு.

கோடீஸ்வர அப்பாவின் ஒரே பொண்ணு. செல்லமா வளர்ந்த பொண்ணுன்றதால், அவங்க அப்பாவோட காரியதரிசியாக வேலை பார்த்த என்னை ரொம்ப சுலபமாக கல்யாணம் மூலம் விலைக்கு வாங்க முடிஞ்சது. கணவன்ற போர்வ ஒரு கூடுதல் வேலையாள் கிடைச்ச திருப்தியை ஏற்படுத்திக்க முடிஞ்சது.

அவளுக்கு என் மேல் மதிப்பு, மரியாதை, அன்பு எதுவும் கிடையாது. என் மேல மட்டுமில்லை; யார் மீதும் கிடையாது. ஒரே ஒரு பொண்ணுதானே- நிம்மிகிட்டகூட கிடையாது. மொத்தத்துல என் கல்யாண வாழ்க்கைங்கறது ஒரு உடைஞ்சு போன வாழக்கை. நிம்மதி இல்லாத வாழ்க்கை."

அவன் சொன்னதை இவள் மிகுந்த அனுதாபத்துடன் கேட்டவாறு மவுனமாய் இருக்க, அவனோ மேலே தொடர்ந்தான்.

"மஞ்சு... இப்போ நான் உன்கிட்டே ஒரு உண்மையைச் சொல்லியே ஆகணும். என்னால் உன்னைக் கல்யாணம் பண்ணிக்க முடியாது. மனைவி அந்தஸ்து கொடுக்க முடியாது. அப்படிச் செய்யணும்னால் புவனாவை நான் விவாகரத்து செய்தாகணும். அது முடியாத காரியம். நிம்மிக்காக அதை என்னால் செய்ய முடியாது. அதனால... அதனால..."

"அவ்வளவுதானே! இதுக்கு ஏன் இப்படித் தடுமாறுறீங்க? கல்யாணமெல்லாம் நான் எதிர்பார்க்கலே. கல்யாணத்துல எனக்கு நம்பிக்கையே விட்டுப் போச்சு. உங்களை மாதிரி வேற வழியில்லாம கல்யாணம் பண்ணிக்கிட்ட ஒரே காரணத்துக்காக சேர்ந்து இருந்துக்கிட்டு இருக்கிறவங்கதான்

அதிகம்னு தோணுது.

கூண்டுக்குள் அடைபட்ட மிருகங்களைப் போல் இயலாமையும், சமூக விதிமுறைகளும் இவர்களைக் கட்டிப் போட்டு வச்சிருக்குன்னு படுது. நல்ல வேளையாக அந்தக் கட்டுப்பாடெல்லாம் எங்களுக்கு இல்லை. ஏன்னா... நாங்கள்லாம் ஏற்கெனவே இந்தச் சமூகத்தால் ஒதுக்கப்பட்டவங்க. எங்களை ஒதுக்கின சமூகத்தை, நாங்களும் ஒதுக்கிட்டோம். அதனால் அந்தப் பயமெல்லாம் எனக்கு இல்லை. நீங்க இப்படித்தான் வாழ்வு தரணும் என்கிற எதிர்பார்ப்பு எதுவுமில்ல.

பார்க்கப் போனால்– 'இதுதான் காரணம்'னு சொல்ல முடியாத ஏதோ ஒரு காரணம் நம்மை இணைச்சிருக்கு. ஒருத்தரை ஒருத்தர் நேசிக்க வச்சிருக்கு. இந்த நேசம் போதும்னு இருக்கேன். மனப்பூர்வமா நான் ஆசைப்பட்டது இந்த மாதிரி ஒரு நேசிப்பிற்குத்தானே தவிர, வேற எதுக்கும் இல்லை.

அதனால் உங்க மனைவியா வாழ முடியலை என்கிற வருத்தமெல்லாம் இல்லை. உங்க மனசுல வாழ முடிஞ்ச ஒரு திருப்தி போதும். கடைசி வரை அந்தத் திருப்தியும், சந்தோஷமும் கிடைக்கணும் என்கிற ஒரு வேண்டுதலையும், எதிர்பார்ப்பையும் தவிர– வேற எந்த எதிர்பார்ப்பும் எனக்குக் கிடையாது. அதனால் நீங்க இதையெல்லாம் நினைச்சு மனசை சங்கடப்படுத்திக்க வேணாம்... என்ன?"

"மஞ்சு... மஞ்சு..."– என்று பதில் பேச முடியாமல் திணறினான்.

தன்னோடு சேர்த்து அவளை அணைத்துக்கொண்டு– மெல்ல காதருகில் சொன்னான்.

"ஏன் மஞ்சு... இனிமேல் எனக்குன்னே நீ இருப்பியா மஞ்சு?"



"இந்த நிமிஷத்தில் இருந்து உங்களுக்காகத்தான் நான். உங்களுக்காக மட்டுமேதான். போதுமா?"

"நடிப்பு, சினிமா எல்லாத்தையும் விட்டுடறியா மஞ்சு?"

"நீங்க எதை விடச் சொன்னாலும் செய்ய காத்துக்கிட்டிருக்கேன்."

"உன்னோட அம்மா, குழந்தைகளுக்குன்னு மாசம் பத்தாயிரம் ரூபாய் செலவுக்குத் தந்துடலாம். அதை வச்சு உங்க அம்மா தாராளமாக குடும்பம் நடத்தலாம். அவங்களை சின்னதா ஒரு இடம் பார்த்து வச்சிட்டு, உனக்குன்னு தனியா ஒரு வீடு வாங்கணும்னு நினைச்சிட்டிருக்கேன். துணைக்கும், வேலைகளுக்கும் ஆட்களை ஏற்பாடு செய்திடறேன்.

காலையில தொழிற்சாலைக்குப் போறதுக்கு முன்னாலும், சாயந்திரமும் நான் வரேன். என்ன மஞ்சு... இந்த ஏற்பாடு உன் மனசுக்குப் பிடிச்சிருக்குதா... சரியாப்படுதா? இதுல ஏதாவது தப்பு இருந்ததுன்னாலோ, சரியாப்படலைன்னாலோ சொல்லு மஞ்சு."

"நீங்க எப்படி சொல்றீங்களோ, எது சொல்றீங்களோ சரிங்க. நாலு மாசமா வாடகை கொடுக்க முடியாமல்– வீட்டுக்கார அம்மாள் கரெண்டை 'கட்' பண்ணிட்டுப் போயிட்டாங்க. அந்த நிலைமையில இருக்கிறவங்களுக்கு இதெல்லாம் ரொம்ப அதிகங்க. நினைச்சுக்கூடப் பார்க்க முடியாதது. அதுல போய் தப்பு கண்டுபிடிக்க முடியுமா? என்ன பேசறீங்க?

எனக்கு எதுவும் தெரியாது. எதுவும் வேணாம். நீங்க மட்டும் இருந்தால் போதும். அதனால் உங்களுக்கு எது தோணுதோ, எது சரின்னுபடுதோ அதைச் செய்யுங்க."

ஒரே வாரத்தில் அபிராமபுரத்தில் இரண்டரை கிரவுண்டில் சுற்றி மா மரமும், வேப்ப மரமும், தென்னை மரங்களும் நிறைந்த

அழகான வீட்டை வாங்கினான். மஞ்சுவின் பெயரிலேயே பதிவு பண்ணினான்.

"உங்க பேர்லயே இருக்கட்டுங்க. என் பேர்ல எதுக்குங்க?" என்று மஞ்சு மறுத்தபோதும் அவன் கேட்கவில்லை.

"நீ சும்மா இரு மஞ்சு. உன் வாழ்க்கைக்குத் தேவையான பாதுகாப்பை நான் தேடித் தரணுமில்ல?" என்றான்.

"ஏங்க, உங்களைத் தவிர வேற பாதுகாப்பு எதுக்குங்க எனக்கு?"– என்ற அவள் பதில்– நெஞ்சைத் தொட்டது.

ஒரு விநாடி கண்மூடி பதில் சொல்லாதிருந்து பின் சொன்னான்.

"இல்ல மஞ்சு... நான் ஒரு இதய நோயாளி. திடீர்னு எனக்கு ஏதாவது ஆயிடுச்சுன்னு வச்சுக்க... அதுக்கப்புறமும் நீ கஷ்டப்படக்கூடாது."

இவள் அதைக்கேட்டு உணர்ச்சி வசப்பட்டுப் போனாள்.

கண்களில் நீர் துளிர்த்து, நெஞ்சு விம்மிற்று.

"ஏங்க... எதுக்கு இந்த மாதிரியெல்லாம் பேசறீங்க? அதுக்கப்புறம் எனக்கு வாழ்க்கைன்னு ஒண்ணு இருக்கும்னு நினைக்கிறீங்களா? நான் வாழணும்னு எதிர்பார்க்கிறீங்களா?"

"இல்ல மஞ்சு. வேணாம். ரெண்டு பேரும் ஒண்ணா செத்துப் போயிடலாம். என்ன?"

"இப்ப வேணாம். இன்னிக்குத்தான் புது வீட்டுக்கு வந்திருக்கோம். அதுக்குள்ள சாவைப் பத்தி ஏன் யோசிக்கணும்? முதல்ல சந்தோஷமா இருக்கிற வழியைப் பார்க்கலாம். அதுக்கு என்ன தேவையோ அதைச் செய்யலாம்"– என்ற மஞ்சுதான் அந்தப் பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாள்.



## 4

அம்மாதான் கொஞ்சம் முரண்டு பண்ணினாள். கோபமும், வெறுப்புமாகப் பேசினாள்.

"... எவனோ முன்பின் தெரியாதவனை நம்பி நாலு காசு வருமானம் வர்ற தொழிலை விடறேங்கறியே. உனக்கென்ன பைத்தியமா? அதுவும் இப்பத்தான் கொஞ்சம் கொஞ்சமா டைரக்டர்கள் பார்வை உன் மேல விழ ஆரம்பிச்சிருக்கு. வசனம் பேசற காட்சியெல்லாம் கிடைக்க ஆரம்பிச்சிருக்கு. இப்ப போய் நடிக்கிறதை யாரும் விடுவாங்களா? யாரோ வச்சுக்கறேன்னு சொன்னான்னால் அதை நம்புவாங்களா? அவனோ பெரிய பணக்காரன்னு சொல்ற. நாலு நாளைக்குக் கூட இருந்துட்டு, அப்புறம் சலிச்சுப் போய் விட்டுட்டுப் போயிட்டான்னால் என்ன செய்வே? அதனால் இப்பவே அவன்கிட்ட ஒப்பந்தம் மாதிரி எழுதி வாங்கிக்க."

அம்மாவின் பேச்சில் இவள் மனதில் குபீரென்று தீ பற்றிக்கொண்டது.

ஆனால், அதை வெளிப்படுத்தாமல் நிதானமாகவே கேட்டாள்.

"என்னன்னு எழுதி வாங்கிக்கச் சொல்ற?"

"மாசம் தவறாமல் இந்தப் பணம் தர்றேன். வீடு வாசல், காரெல்லாம் வாங்கித் தரேன். பாங்குல கணிசமா ஒரு தொகை போடறேன்னெல்லாம் எழுதி..."

"போறும்... நிறுத்தும்மா. பணம், பணம், பணம்! அதுதான் வாழ்க்கைன்னு நினைக்கறியா? அதை

மிஞ்சி வாழ்க்கையில வேற எதுவும் இல்லாத மாதிரி பேசற?"

"இத்தனை கஷ்டப்பட்டும் உனக்கு ஏண்டி புத்தி வரலை? பணத்தோட அருமை புரியலை? அது இல்லாத காரணத்துனாலதாண்டி நாம் இப்படி நிக்கறோம். நீ நாய் ஓட்டம் ஓடி சம்பாதிக்கிறதுகூட இதுக்குத்தான்."

"இதுக்குன்னால் எதுக்கும்மா?"

"வயத்துப் பசிக்கு."

"வெறும் பசிக்கு மட்டும்தான்னால் இப்படி சம்பாதிக்க வேண்டிய அவசியம் இல்லேம்மா. நீ, நான், தங்கைங்க எல்லாருமா நாலு வீட்டுல வேலை செய்தால் போதும். அதுக்கு மேல எது எதுவோ தேவையா இருக்கிற காரணத்துனாலதான் என்னை ஓட வைக்கற."

"ஏய்... என்னடி வாய் ரொம்ப நீளுது? இப்ப என்ன சொல்ற?"

"வேற எதுவும் சொல்லலை. இனிமே நான் சினிமாவுல நடிக்கமாட்டேன். இந்த மாதிரி 'சான்ஸ்' கேட்டு ஓடமாட்டேன். ஆசைப்பட்ட மாதிரி எனக்கு குடும்ப வாழ்க்கை கிடைச்சிருக்கு. ஒருத்தரோட வாழற அருமையான சந்தர்ப்பம் அமைஞ்சிருக்கு. அதை நான் யாருக்காகவும் விட்டுக் கொடுக்கப் போறதில்லை. கைநழுவ விடப் போறதில்லை. எனக்குப் பிடிச்ச மாதிரி என் வாழ்க்கையை நான் அமைச்சுக்கப் போறேன்."

"உன்கிட்ட என்ன பேச்சு? அந்த ஆள் உன்னைக் கூட்டிட்டுப் போக வருவான் இல்லே. அவன்கிட்ட நான் பேசிக்கறேன்."

"நீ அவருகிட்ட பேசவும் வேணாம்... ஒண்ணும் வேணாம்."



"எப்படி உன்னை தடுக்க முடியாதுன்னு நீ சொல்றியோ... அதே மாதிரி நான் பேசறதையும் நீ தடுத்துட முடியாது."

அன்று மாலை வந்த அவனிடம் அம்மா என்ன பேசினாளோ, அவன் என்ன பதில் சொன்னானோ தெரியாது.

அம்மாவின் பேச்சைக் கேட்கக் கூடாதென்று ஓடிப் போய் குளியல் அறைக்குள் இவள் நுழைந்துகொண்டாள். அவனிடம் பணத்தைப் பற்றி ஏதாவது கேட்டுவிடப் போகிறானோ என்று மனசு பதறிற்று. நெஞ்சு நடுங்கிற்று.

'பணம், பணம்! இதைத் தவிர வேறு எதுவும் தெரியாதோ... அன்பு, ஆசை, பாசம், காதல் இதெல்லாம் புரியாதோ? வெறும் பணத்தால் வாழ்ந்துவிட முடியாது என்பதை எப்போது தெரிந்துகொள்ளப் போகிறாள்?' என்று நினைத்தபோது கண் கலங்கிற்று.

சிறிது நேரத்தில் அம்மாவே அவளைத் தேடிக்கொண்டு வந்தபோது முகம் பளிச்சென்று இருந்தது.

உதட்டில் சிரிப்பு எட்டிப் பார்க்கச் சொன்னாள்:

"அவரு காத்துக்கிட்டிருக்காரு. எங்கடி போயிட்ட? நம்ம வீட்டுல எல்லாம் உட்கார்ற மனுஷராடி? அந்த கார், தெருவுல நுழையவே கஷ்டப்பட்டிருக்கும் போல இருக்கு. அப்படிப்பட்டவரை உட்கார வச்சிட்டு எங்கடி போயிட்ட?"

அம்மாவின் அந்த உருக்கம் இவளுக்கு ஆச்சரியமான விஷயமாக இருக்க, இவள் அன்று மாலை அவனது தலையை வருடியவாறு மெல்ல கேட்டாள்:

"எங்க அம்மாகிட்ட என்ன பேசினீங்க?"

"அதெல்லாம் இப்ப எதுக்கு மஞ்சு? நீயும்... நானும் தனியா, சந்தோஷமா, நிம்மதியா இருக்கிற இந்த நேரத்தைப்

பேச்சால்கூட மற்ற யாரும் பங்கு போட்டுக்கிறதை நான் விரும்பலை."

அத்தோடு விட்டுவிட்டாள் அவள்.

அம்மாவைப் பற்றி ஒன்றும் கேட்கவில்லை. அம்மாவும் தடை சொல்லவில்லை. அம்மாவை வீடு பார்த்து அமர்த்தின பின்பே இவளை அபிராமபுரம் வீட்டிற்குக் கூட்டி வந்தான் அவன்.

சமைக்க, வீட்டு வேலை செய்ய, வாசலில் காவல் நிற்க என்று தனித் தனியாக ஆள் போட்டிருந்தான்.

அதைப் பார்த்த அவள் கேட்டாள்.

"ஏங்க... இப்படி எல்லாத்துக்கும் ஆள் போட்டுட்டீங்கன்னால் எனக்குன்னு என்ன வேலை இருக்கும்?"

"ஒரே ஒரு வேலை உனக்காக மட்டும்னே ஒதுக்கி வச்சிருக்கேன்."

"என்னங்க...?"

"என்னை நினைக்கிற வேலை. இருபத்து நாலு மணி நேரமும் என் நினைவில் மிதக்கிற வேலை."

"இது வேலையா? இதை நீங்க சொல்லணுமா...? இதுக்காகத்தானே நான் உயிர் வாழறேன்."

அவன், அதற்கு மேலே எதுவும் பேசாமல்– அவளை இறுக அணைத்துக்கொண்டான்.

அபிராமபுரம் வீட்டிற்கு வந்த பின்னர்– தினமும் காலையில் தொழிற்சாலைக்குப் போகுமுன்– அவன் வருவான். பத்து மணிக்கு வருபவன் பதினொன்று, பதினொன்றரை வரை அவளுடன் இருப்பான்.

சில நேரங்களில் அவளுடனே சாப்பிடுவான். சிறிது நேரம் அவள் கையோடு தன் கையைக் கோர்த்து நெஞ்சில் இருத்திக்கொண்டு படுத்திருப்பான். 'தொழிற்சாலைன்னு



ஒன்னு இல்லைன்னால், இப்படியே உன் கூடவே இருந்துடுவேன்' என்பான்.

அவளோடு சேர்ந்து முழுதாய் வாழக் கொடுத்து வைக்காத குறை எப்போதும் அவன் பேச்சில் தொனிக்கும்.

"மஞ்சு... நிம்மிக்கு கல்யாணம் ஆயிடட்டும். அப்புறம் உன்கூடத்தான் இருப்பேன். நீதான் என் மனைவின்னு உலகம் முழுசுக்கும் எடுத்துச் சொல்வேன்."

"ஏங்க... உலகத்துக்கு எதுக்குத் தெரியணும்! நமக்குத் தெரிஞ்சால் போறாதா?"

அந்தப் பதில் அவனை யோசிக்க வைத்தது. 'எப்படிப் பேசுகிறாள்?' என்று ஆச்சரியப்படவைத்தது.

சாதாரணப் பெண்ணில்லை இவள் என்று மதிப்பும், மரியாதையுமாகப் பார்க்க வைத்தது. அதன் பின்னரே உலகிற்கு எதற்காகத் தெரியவேண்டும் என்பதும், உலகம் என்பது என்ன என்பதும் பிடிபட்டது.

அவளோடு இன்னமும் ஐக்கியப்பட்டு– அவள்தான் எல்லாம் என்றாகி– வாழ்க்கையின் நிஜமான அர்த்தமும், அன்பின் பரிணாமங்களும் சுலபமாக தெரியவரும் வழியைக் கற்றுக்கொண்டான்.

அவளை அணைத்து முத்தமிட்டு மென்மையாகச் சொன்னான்.

"அப்போ நான் வரட்டுமா கண்ணம்மா?"

"என்ன... இன்னிக்கு இப்பவே கிளம்பறீங்க?"

"கொஞ்சம் அவசரமா போக வேண்டி இருக்கும் என்கிறதால்தான் சீக்கிரம் வந்தேன். முக்கியமான கூட்டம் இருக்கு. அதிசயமா நானும் கலந்துக்கலாம்னு இருக்கேன்."

"இருங்க, காப்பி கொண்டு வரச் சொல்றேன்."

காப்பி வந்ததும்– தான் பாதி குடித்து, மீதியை அவளுக்குத் தந்தான்.

அவள் அதில் பாதியைப் பருகி– மீண்டும் அவனிடமே தர–

"ம்... ஹூம். இன்னிக்கு நீ இது மொத்தத்தையும் குடிக்கற... தினமும் எனக்கு அதிகம் கொடுத்து– நீ சும்மா பேருக்குக் கொஞ்சம் குடிக்கிற கதை வேணாம்..."

"ஏங்க... நீங்க குடிக்கிறது எனக்குத்தானே வருது. நீங்க வேற... நான் வேறன்னு தனித் தனியா இருக்கோமா என்ன...?"

"அதனால்தான் நீ குடிச்சா, அது எனக்கு வந்துடும்னு சொல்றேன்..."

"போங்க நீங்க... பேச்சுல உங்களை மிஞ்ச என்னால முடியுமா...?"

"நானா பேசறேன். இது கூட நீதான் பேசற"– என்று எழுந்துகொண்டான்.

"வரட்டுமா...? பாக்டரிக்குப் போனதும் வழக்கம் போல் போன் பண்ணிடறேன். என்ன...?"

"சரி" என்று அவனது அணைப்பில் இணைந்து கீழே இறங்கி வந்தாள்.

அந்த கறுப்பு கார் வெளியேறுகிற வரை வாசலில் நின்று பார்த்துவிட்டு உள்ளே வந்தாள்.

பதினைந்தாவது நிமிடத்திற்கெல்லாம் தொலைபேசியில் கூப்பிடுவான் என்பதால், சில பத்திரிக்கைகளைக் கையில் எடுத்துக் கொண்டு தன் அறைக்குள் நுழைந்து, கதவைத் தாழிட்டுக் காத்திருந்தாள்.

சரியாக இருபதாவது நிமிடம் தொலைபேசி அடித்தது.

இவள் எடுத்ததும்...



"லவ் யூ டார்லிங்..." என்று கொஞ்சிற்று.

"லவ் யூ சேகர்."

"வந்து சேர்ந்துட்டேன் கண்ணம்மா... இப்ப 'மீட்டிங்'கிற்குப் போறேன். திரும்பி அறைக்கு வந்ததும் பேசறேன்."

"மீட்டிங் எங்கே...?"

"கான்பிரன்ஸ் ஹால்லதான்."

"திரும்பி எப்ப வருவீங்க...?"

"இன்னும் ஒரு மணி நேரம் ஆகலாம்..."

"அதுவரைக்கும் பேசாமல் இருக்கணுமா?"

"ஒரு மணி நேரம் தானேடா கண்ணா?"

"ஒரு மணி நேரம் உங்களுக்கு சாதாரணமா இருக்கலாம். ஆனால், எனக்கு ஒரு யுகம் மாதிரி தெரியும்."

"என்ன செய்யறது சொல்லு கண்ணம்மா? இன்னிக்கு ஒரு நாள் தானே... கொஞ்சம் பொறுத்துக்கடாம்மா..."

"சரி... அறைக்கு வந்த உடனே போன் பண்ணிடணும்."

"அதை நீ சொல்லணுமா...? அறை உள்ளே நுழைஞ்ச உடனே என் கை, டெலிபோனுக்குத்தான் போகும். ஓ.கே...? இப்ப நான் வைக்கிறேன். லவ் யு, லவ் யு... ஐ வாண்ட் யு..."

"லவ் யு... ஐ லிவ் பார் யு..."

"வி லிவ் பார் ஈச் அதர். ஓ.கே., வைக்கறேண்டி கண்ணம்மா. வந்ததும் போன் பண்ணுறேன்..."

ரிஸீவரில் அழுத்த முத்தமிட்டு தொடர்பைத் துண்டிப்பான்.

இவள் பிரித்த பத்திரிகையை மார்பு மீது போட்டுக்கொண்டு, அவனைப் பற்றின நினைவில் ஆழ்ந்து போவாள். முதல் முதலாக அவனை சந்தித்ததில் இருந்து நினைத்துப் பார்ப்பாள். அவன் பேசின ஒவ்வொரு பேச்சும் ஞாபகத்திற்கு வரும்

அவன் தன்னோடு இருந்த சந்தோஷத்தைத் தரும்.

'ஓ.... எப்படிப்பட்டவன் தனக்குக் கிடைத்திருக்கிறான்!'– என்பதில் மனசு பூரிக்கும். இவனோடு வாழ அந்த புவனாவிற்குக் கொடுத்து வைக்கவில்லையே என்று தோன்றும்.

'கடவுளே... கடைசி வரை எங்களை இப்படியே வை...' என்று இதயம் பிரார்த்திக்கும். அடுத்த ஜென்மம் என்று இருக்குமானால், அப்போதும் எங்களை ஒன்றாகச் சேர்த்து இணைத்து வைத்துவிடு...' என்று வேண்டிக்கொள்ளும்.

தினமும் வேண்டுகிற இதே வேண்டுதல், அதே நினைவுகள்தான். ஆனாலும் அவற்றில் அலுப்போ, சலிப்போ ஏற்பட்டதில்லை.

அவன் தன்னைவிட்டுப் பிரிந்த உடனே இந்த நினைவுகளில் ஈடுபடுத்திக்கொள்வதன் மூலம் அவனுடனே இருக்கிற பாவனையை அவளால் ஏற்படுத்திக் கொள்ள முடிந்தது. அதில் சந்தோஷப்பட முடிந்தது.

நினைவுகளில் வாழ்வதில் ஒரு சுகம் இருப்பதை உணர முடிந்தது.

அந்த இதமான சுகத்தில் லேசாய் கண் அயரும்போது, அவன் கூப்பிடுவான்.

"என்ன கண்ணம்மா... தூங்கிட்டியா...?"

"உங்களை நினைச்சிட்டே படுத்துட்டிருந்தேன்? அப்படியே தூங்கிப் போயிட்டிருக்கேன்..."

"ஸாரிடா டார்லிங். உன்னை எழுப்பிட்டேன் பாரு... நீ தூங்கறது தெரிஞ்சிருந்தால் போன் பண்ணியிருக்க மாட்டேன்..."

"நான் தூங்கினத்துக்குக் காரணமே ஒருவேளை கனவுல நீங்க வருவீங்களோங்கற எதிர்பார்ப்புலதான்...?"

"கனவுல எதுக்கு...? நான்தான் சாயந்திரம் நேர்ல வரப்



போறேனே...?"

"அது சாயந்திரம்தானே...? இப்போ ஒரு போனஸ் மாதிரி கனவு..."

"ம்ஹூம்..."– என்று செல்லமாய் முத்தமிட்டு, பதில் முத்தம் பெற்றுக்கொள்வான்.

"ஆமாம், ஒரு மணி நேரத்துல கூப்பிடறேன்னு சொன்னீங்க... மணி ரெண்டாகப் போகுது..."

"கொஞ்சம் நேரமாயிடுச்சு மஞ்சு... கூட்டம் முடிஞ்சப்புறம் யார் யாரோ பேசப் பிடிச்சுட்டாங்க..."

"யாரு?"

"வேற யாரு... ஆடிட்டர், வக்கீல்..."

"சரி... டீயும், பிஸ்கட்டும் சாப்பிட்டீங்களா?"

"இன்னும் இல்ல..."

"மொதல்ல சாப்பிடுங்க. காலையில பத்து மணிக்கு சாப்பாடு சாப்பிட்டதோடு சரி. மணி இப்ப ரெண்டாகுது. இதுவரை ஒண்ணும் சாப்பிடலைன்னா என்ன ஆகுறது...?"

"ஏன் மஞ்சு, அங்க நீ ஒரு காப்பி கொடுத்தே... 'மீட்டிங்'கல ஒரு காப்பி ஆயிடுச்சு..."

"இப்படி டீ, காப்பி குடிச்சே வயிற்றை நிரப்பிடுங்க..."

"அது கூட குடிக்காம, வயிற்றை நிரப்பிக்க ஒரு வழி இருக்கே!"

"என்ன...?"

"உன்கிட்டப் பேசறது. இப்படி பேசிட்டே இருந்தால் பசி, தாகம் எதுவும் எடுக்காது மஞ்சு..."

"அதனால்தான் இப்போ போனை வைக்கறேன்னு சொல்றேன். முதல்ல நீங்க சாப்பிடுங்க..."

"நீ சாப்பிட்டியா மஞ்சு...?"

"உங்களை மாதிரி நானும் இப்ப காலையில் பத்து மணிக்கெல்லாம் சாப்பாடு சாப்பிட்டுறேன்ல..."

"அதுக்கப்புறம் என்ன சாப்பிட்டே...?"

"ஒண்ணுமில்ல... உங்கக்கூட காப்பி குடிச்சேனே...?"

"அதோட ஒண்ணும் இல்லாமலா இருக்கே! ஏம்மா... பசிக்கலை...? சகுந்தலா ஒண்ணும் செய்து தரலை...?"

"எனக்கும் மட்டும் எப்படிப் பசி எடுக்கும்? உங்ககிட்ட பேசிட்டிருக்கிறப்ப பசி, தாகம் ஏதாவது தெரியுமா?"

அவனிடம் இருந்து அதி சந்தோஷமான சிரிப்பு ஒன்று வெளிப்பட்டது.

"ஓ.கே. டார்லிங். நீ போய் சாப்பிடு. நான் திரும்ப கூப்பிடறேன்."

"எப்போ...?"

"அரை மணிக்கப்புறம் கூப்பிடறேம்மா."

"சரி."

அரை மணி, முக்கால் மணியாகி, ஒரு மணி தாண்டியதும் இவளே மீண்டும் போன் பண்ணுவாள்.

"சந்திரசேகரன் ஹியர்" என்னும் அவனது கம்பீரக் குரலைக் கேட்ட பின்பு நிதானமாய் அழகாய் சொல்லுவாள்.

"எனக்கு மஞ்சுன்னு பேரு. நான் இந்த டெலிபோன் நம்பர்ல இருக்கேன்."

"ஓ... டார்லிங். எதிர்ல ஆடிட்டரையும், செகரெட்டரியையும் வச்சுக்கிட்டு உன்கிட்ட எப்படிப் பேச முடியும் சொல்லு?"

"ஏன் முடியாது? சும்மா இயல்பா பேசுறது."

"ஸாரி... உன்கிட்ட என்னால அப்படி பேச முடியாது. பேச்சுக்கு பேச்சு டார்லிங் சொல்லணும்... கண்ணம்மான்னு கொஞ்சணும். போன்ல 'கிஸ்' பண்ணணும். அதெல்லாம்



இல்லாம பேசணுங்கறது நடக்காது. அதனாலதான் அவங்க போகணும்னு காத்துக்கிட்டிருந்தேன்."

"போயிட்டாங்களா?"

"ஓ. எஸ்."

"அப்ப உடனே பண்ணி இருக்கலாம்ல? காத்துக்கிட்டு இருப்பேன்னு தெரியாது? காத்துக்கிட்டு இருக்கிறது எவ்வளவு கஷ்டமான விஷயம்னு உங்களுக்கு எப்படி புரியும்?"

"ஏன்... சாயந்திரம் எப்படா வரும், என் மஞ்சுவைப் பார்க்கலாம்னு காத்துக்கிட்டு இருக்கிற எனக்கு 'வாட் இஸ் வெயிட்டிங்?'ன்னு புரியாதாக்கும்?"

"சரி... சாயந்திரம் கொஞ்சம் சீக்கிரம் வரீங்களா?"

"என்ன விசேஷம் மஞ்சு?"

"ஒண்ணுமில்ல. உங்களுக்கு ரொம்பப் பிடிச்ச பால் போளி செய்யச் சொல்லி இருக்கேன். சூடா சாப்பிடுவீங்கன்னு சீக்கிரம் வரச் சொல்றேன்."

"ஓ.கே.டா... வாரேண்டா... எத்தனை மணிக்கு வரணும்?"

"ஐந்து."

"ம் ஹூம்... கொஞ்சம் தள்ளி."

"ஐந்தரை?"

"ஐந்தரையில் இருந்து ஐந்தே முக்காலுக்குள்ள... என்ன?"

"சரியா வந்துடணும்."

"கடிகார முள்ளை நீ திருப்பி வச்சுக்கலாம்."

ஐந்தரையில் இருந்து எட்டு மணி வரையிலான பொழுதை காவியமாக எழுதலாம். அவ்வளவு இனிமையாய்ப் போகும். மாதவி- கோவலனது இணைப்பை நினைவூட்டும்.

இவளுக்கு நடனமாடத் தெரியாத ஒரே குறை தவிர– அந்தக் காதலுக்கு எந்த விதத்திலும் இது தாழ்ந்ததல்ல என்று தெரியும். மாடி அறையில் குளிர் சாதனத்தை ஓடவிட்டு– மிக மிக இயல்பான ஒரு சுதந்திரத்தோடு அவன் கட்டிலில் படுத்து பாட்டு கேட்பான்.

அவனுக்கு கர்நாடக சங்கீதம் வேண்டும். காரில் போகிறபோது, குளிக்கிறபோது, படிக்கிறபோது, படுக்கிறபோது என்ற கூடவே மெலிதாய் சங்கீதம் இழைய வேண்டும். மதுரை மணி, டி.கே.பட்டம்மாள், எம்.எஸ். சுப்புலட்சுமி, மகாராஜபுரம் சோமு என்று மாறி மாறி சி.டி. ஓட வேண்டும்.

"இது என்ன ராகம்னு சொல்லு பார்க்கலாம்?" என்று அவளைக் கேட்பான்.

"ம் ஹூம், தெரியாது. இதுல ஞான சூன்யம்."

"காம்போதி..." என்றவன்– சட்டென்று நினைவிற்கு வந்தவனாகக் கேட்டான். "ஏன் மஞ்சு... நீ பாட்டு கத்துக்கிட்டா என்ன...?"

"ஐயயோ... இந்த வயசுக்கு மேலயா?"

"சங்கீதத்துக்கு வயசு ஒரு தடையா? இத்தனை சின்ன வயசுல ஸ்ரீனிவாசனுக்கு மாண்டலின் எப்படி வந்தது?"

"அதெல்லாம் பிறவி ஞானங்க. விட்ட குறை தொட்ட குறையா தொடருது... பூர்வ ஜென்மத்தோட வாசனை இப்ப அடிக்கிறது."

"அது சரி... இந்த ஜென்மத்துல கொஞ்சம் தொட்டுப் பார்க்கலாமே, அடுத்த ஜென்மத்துல தொடரட்டுமே!"

"அடுத்த ஜென்மம்னு ஒண்ணு இருந்தால், நான் தொடரணும்னு ஆசைப்படறது நம்ம பந்தம்தானே தவிர... வேற இல்லை. அப்பவும் நீங்க எனக்குக் கணவரா வரணும். நான் உங்க மனைவியா இருக்கணும். நமக்கு குறைஞ்சது ஒரு



டஜன் குழந்தைங்க பொறக்கணும்."

"மஞ்சு... மஞ்சு..."– என்று உருகி அவளை அணைத்துக்கொள்வான்.

எட்டு மணிக்கு சுயநினைவு வர– கிளம்பிப் போவான். வீட்டுக்குப் போன பின்பும் அவளது அருகாமைக்கும், வெறுமைக்கும் மனசு ஏங்கும்.

தனியாக தன் அறையின் கட்டிலில் புரளுகிறபோது மஞ்சு இருந்தால் எப்படி இருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்க்கும். உடனே எழுந்து அவளிடம் போய்விடலாம் போல் மனசு பரபரக்கும்.

'மஞ்சு... நீயில்லாமல் என்னால ஒரு நிமிஷம் கூட இருக்க முடியலேடா' என்று அவள் காதருகில் கிசுகிசுத்து– அவள் தலையைத் தன் தோள் மீது சரித்துக்கொண்டு படுப்பதில் உள்ள இனிமையான அனுபவம், சுகம் இரண்டையும் இழப்பதில் ஏற்படுகிற தவிப்பில் உடனே அவளை தொலைபேசியில் கூப்பிடுவான்.

"தூங்கிட்டியாடா...?"

– அவனது கொஞ்சல் குரல் உருகி– இவளையும் உருக்க, இவள் மெதுவாய் பதில் சொன்னாள்.

"உங்க போன் வராமல் என்னிக்குத் தூங்கி இருக்கேன்...? குட் நைட் சொல்லாமல் தூக்கம் வருமா?"

"இங்கேயும் அதே நிலைமைதான். தூக்கம் வர மாட்டேங்குது."

"ஏங்க?"

"நீ பக்கத்துல இருக்கணும்னு தோணுது."

"வரட்டுமா?"

"ம்... வா"

"நிஜம்மா வந்துடுவேன். வடிவேலுவை வண்டி எடுக்கச்

சொல்லி, ஓடி வந்துடுவேன்."

"நீ வருவேன்றது தெரியும்டா கண்ணா. ஆனா, உன்னை வரவேற்கிற நிலைமையில என் வீடு இல்லையே."

"சும்மா, விளையாட்டுக்குச் சொன்னேன். உடனே ஏன் இப்படி வாடிப் போயிடறீங்க?"

"அதில்லை மஞ்சு. இங்க வீட்ல நாலு பேர் இருக்கிறப்போவே என்னால மனசுக்குள் ஏற்படற தனிமை உணர்ச்சியைத் தாங்கிக்க முடியலையே. அங்க நீ பாவம் தன்னந்தனியா இன்னும் எவ்வளவு கஷ்டப்படுவேங்கறதை நினைக்கிறப்ப ரொம்ப வருத்தமா இருக்கு."

"ஐய... இதுல என்ன வருத்தம்? நான் தனியா இருக்கிறதா யாரு சொன்னது?"

"தனியா இல்லாம யார்கூட இருக்கே?"

"உங்க கூடத்தான். எப்பவும் உங்களைப் பக்கத்துலயே வச்சிட்டிருக்கேன். மனசால பேசறேன். இப்பகூட உங்க கூடத்தான் படுத்துட்டிருக்கேன். உங்க தோள் மேல தலையை வச்சு, கையோட கை கோர்த்து நெஞ்சுல அழுத்திட்டிருந்தேன். உங்க போன் வந்தது."

"மஞ்சு... அந்த மாதிரி உன்னைப் பக்கத்துல இருத்திக்க முடியாத காரணத்துனாலதான் நான் ரொம்ப சிரமப்படறேன்."

"ஆமாங்க. நீங்க எப்பவும் என் கூடவே இருக்கிற மாதிரி நினைச்சுக்கிறதாலதான் எனக்கு எந்த கஷ்டமும் தெரியலை. காலையில எழுந்த உடனே உங்க பாதத்தைத் தொட்டு கண்ணுல ஒற்றிப்பேன். முன் உச்சியில் முத்தமிடக் குனியறப்போ நீங்க என் தோளைப் பிடிச்சு அழுத்தி திரும்ப படுக்க வைப்பீங்க."

நான், 'எழுந்திருக்க வேணாமா ராஜா... மணி ஆறே கால்



ஆகாதே?'ன்னு கெஞ்சுவேன். நீங்க விடமாட்டீங்க. 'என்ன அவசரம்? இன்னும் கொஞ்ச நேரம் படுத்துக்க. அரை மணியில எழுந்து போகலாம்'னு என் இடுப்பில் கைபோட்டு இழுத்துப்பீங்க."

"போதும் மஞ்சு... பிளீஸ், இதுக்கு மேல சொல்லாத. எதுவும் பேசாதே. என்னால தாங்க முடியலை... மஞ்...சு..."

அவனது குரல் கரகரக்க– இங்கே இவளது கண்ணோரங்கள் கசிந்து, கன்னங்களில் வழியும்.

இரு மனங்களும் சங்கமித்து ஐக்கியமாகி– அன்புப் பிரவாகத்தில், காதல் என்கிற ஜுவாலையில் ஒன்றாய் உருகி ஒன்றுமே இல்லாமல் போன நிலையில் வார்த்தைகள் அர்த்தமற்றுப் போய் மவுனமே சங்கீதமாகும்.

## 5

மணிக் கணக்கு தவறாமல் நேரிலும், தொலைபேசியிலும் உருகி உருகிக் கரைந்து ஒருவரோடு ஒருவர் பின்னிப் பிணைந்து ஐக்கியமாகி, நீதான் நான்– நான்தான் நீ என்று இணைந்து– 'இப்படிக்கூட உண்டா? இந்த மாதிரிகூட அன்பு செலுத்த முடியுமா?' என்று தாங்களாகவே உள்ளுக்குள் ஆச்சரியப்பட்டு நாளுக்கு நாள் இன்னும் நெருங்கி– இறுகிக்கொண்டிருந்த போது–

நான்கு நாட்களாக அவனிடம் இருந்து ஒரு தகவலும் இல்லை. நேரிலும் வரவில்லை.

தினமும் காலை ஆறரை மணிக்குக் கண் விழித்த உடனே– 'குட் மார்னிங் டார்லிங்' சொல்கிற அந்த

டெலிபோன் வரவில்லை.

ஆறரை, ஏழு, ஏழரை என காத்திருந்து தவித்துப் போனாள். பொழுது விடிந்ததற்கு எந்த அர்த்தமும் இல்லாத மாதிரித் தோன்றியது.

'என்ன ஆயிற்று? ஏன் டெலிபோன் வரவில்லை? இதுவரை ஒரு நாள் கூட வராமல் இருந்ததில்லையே? தன்னுடன் பேசாமல் அவராலும் இருக்க முடியாதே? என்ன ஆயிற்று?' – என்று மனசு குழம்பித் தவித்தது.

'சரி, இன்னும் சற்று நேரம் பொறுத்துப் பார்க்கலாம்' என்ற முடிவில் குளிக்கப் போனாள். குளிக்கும்போது ஒருவேளை அவன் கூப்பிடக்கூடும் என்கிற எதிர்பார்ப்பில் அவசரமாய் மொண்டு ஊற்றிக்கொண்டு ஓடி வந்தாள்.

அவன் கூப்பிடவில்லை!

உடை மாற்றியபோது– காப்பி குடித்தபோது– பூஜை அறைக்குள் நுழையும் முன்– டெலிபோன் பக்கத்திலேயே காத்திருந்து பார்த்தாள்.

ம்... ஹூம். அவன் கூப்பிடவே இல்லை.

இவளால் மனம் ஒன்றி பூஜை செய்ய முடியவில்லை. பூஜையில் இதயம் லயிக்கவில்லை. அவனிடம் இருந்து போன் வராதது உறுத்தலாய் நின்றது.

'கடவுளே... அவர் போன் வரணுமே. பேசணுமே. அந்தக் குரலை ஒரு முறை கேட்டால்கூடப் போதுமே முருகா! அவரை போன் பண்ண வை. குருவாயூரப்பா... அவரை பேசச் சொல்லு.'

ஒன்பதரை, பத்து என்று நேரம் ஓடியதே தவிர, கிரஹாம்பெல் கண்டுபிடித்த அந்தச் சின்ன இயந்திரத்திடம் இருந்து செய்தியில்லை. அதன் மணி ஒலிக்கவில்லை.

பத்தரை, பதினொன்று வரை– ஒரு வேளை அவன் நேரில்



வரக்கூடும் என்று காத்திருந்து, நேரில் வராததால் இவளது தவிப்பும்... துடிப்பும் இன்னமும் அதிகமாயிற்று.

வாசலுக்கும், உள்ளுக்குமாக நடையாய் நடந்தாள்.

"என்ன சகுந்தலா, முதலாளி இன்னும் வரலை?"– என்று சமையற்காரப் பெண்ணிடம் கேட்டாள்.

"வருவாரும்மா. ஒருவேளை கொஞ்சம் நேரமாகி வராரோ என்னவோ!"– என்றது அந்தப் பெண்.

"தாமதமா வர்றதுன்னா போன் பண்ணிச் சொல்வாரே... இன்னி காலையிலே இருந்து போனைக் கூடக் காணோம் சகுந்தலா."

இவளது முகத்திலும், குரலிலும் இருந்த கவலையைப் பார்த்த அந்தப் பெண் ஆறுதலாகச் சொல்லிற்று:

"ஒன்னும் இருக்காதும்மா. கவலைப்படாதீங்க! ஏதாவது முக்கிய வேலையா இருந்துட்டிருப்பாரு. மத்தியானம் இல்லைன்னால் சாயந்திரம் வருவாரு பாருங்க."

இவளால் அப்படிப் பேசாமல் இருக்க முடியவில்லை.

தொழிற்சாலையில் அவனது தனிப்பட்ட உபயோகத்திற்கான தொலைபேசி எண்களைச் சுழற்றினாள். அது அடித்துக்கொண்டே இருந்ததே தவிர, எடுக்கப்படவில்லை

அதனால் அவன் தொழிற்சாலைக்கும் வரவில்லை என்பது உறுதியாக, இன்னமும் சிரமப்பட்டுப் போனாள்.

என்ன ஆயிற்று? ஏன் தொழிற்சாலைக்கு வரவில்லை என்பது தெரியாமல்– வீட்டு எண்களைச் சுழற்றி, நீண்ட நேரம் அடித்த பின் எடுக்கப்பட்டு, இளம்பெண்ணின் இனிமையான பதற்றம் நிறைந்த குரல் "ஹலோ" சொல்லிற்று.

நிம்மி...!

இவளுக்குச் சட்டென்று குரல் எழும்பவில்லை. என்ன கேட்பதென்று தெரியவில்லை.

யார் என்று நிம்மி கேட்டால் என்ன பதில் சொல்ல முடியும்? பெயரைச் சொல்ல முடியுமா? வேறு யாரென்று சொல்ல...?

"ஹலோ... ஹலோ..."

பட்டென்று ரிஸீவர் வைக்கப்பட்டுவிட, இவள் மீண்டும் கூப்பிட– இப்போதும் நிம்மியே எடுத்தாள்.

இவள் சுதாரித்துக்கொண்டு கேட்டாள்.

"இஸ் மிஸ்டர் சந்திரசேகரன் அவைலபிள்?"

"நோ... ஹூ இஸ் காலிங்?"

"அவர் ஊர்ல இருக்காரா?"

"நீங்க யார்னு கேட்டேனே?"

"நான்... நான் அவரோட பிரெண்ட்."

"பேரு...?"

"பேர்... ம... மஞ்சு..."

சட்டென்று ரிஸீவர் அவளிடம் இருந்து பிடுங்கப்பட்டு, "புவனா பேசறேன்... யார் அவரைப் பற்றி இத்தனை அக்கறையா விசாரிக்கிறது?"

இவள் பதில் சொல்லத் தயங்கி நிற்க– புவனா, நிம்மியுடன் கேட்பது தெளிவாய் காதில் விழுந்தது.

"யாராம் நிம்மி...?"

"யாரோ மஞ்சுன்னு பேர் சொன்னாங்க மம்மி."

"அட ச்சீ... அவள்லாம் போன் பேசினால் ஏன் பதில் சொல்லிட்டிருக்கே...? பேசாமல் வைக்க வேண்டியதுதானே? வீட்ல எல்லா வேலைக்காரங்களுக்கும் சொல்லி வை. டெலிபோன்ல வேற எந்த பொம்பளைக் குரல் கேட்டாலும் பதில் சொல்ல வேணாம்னு. உன்னையும், என்னையும் தவிர யாருக்கும் எந்தப் பதிலும் சொல்ல வேணாம்... என்ன?"

"சரி மம்மி..."



அதைக் கேட்டுக்கொண்டே இவள் சட்டென்று டெலிபோன் தொடர்பைத் துண்டித்தாள்.

கண்களில் நீர் நிறைந்து தளும்பிற்று. நெஞ்சுக்குள் பொங்கிப் பொங்கி வந்தது.

'அட ச்சீ'... எத்தனை சுலபமாகச் சொல்லிவிட்டாள், புவனா! ஒரு விநாடிதான் அந்த நினைவு.

பின் மீண்டும் அவனது ஞாபகம் வந்து நெஞ்சை நிறைக்க– பதில் கிடைக்காத கேள்வியில் அலைக்கழிந்து சாப்பிடக்கூடப் பிடிக்காமல் அறைக் கதவை சாத்தித் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு கட்டிலில் சரிந்தாள்.

'என்ன சேகர், இப்படிச் செய்கிறீர்கள்...? ஒரு போன் பண்ணி சொல்லிவிட்டு எங்கேயும் போகக் கூடாதா? நான் தவிப்பேன் என்பது தெரியாதா...? நடுராத்திரி நேரமானாலும் சொல்லிவிட்டுப் போயிருக்கக் கூடாதா? சரி, போன இடத்தில் இருந்தாவது கூப்பிடக்கூடாதா?'

ஒருவேளை பெங்களூர் போயிருப்பாரோ, இல்லாவிட்டால் ஹைதராபாத்...? அதுவுமில்லை என்றால்... முதல் விமானத்தில் டெல்லி!

எதுவானாலும் இன்று சாயந்திரத்திற்குள் கூப்பிடுவார். சற்று பொறுமையாய் காத்திருப்போம். காத்திருத்தலைத் தவிர வேறு வழியில்லை.

அவள் காத்திருந்தாள்.

ஆனால், அன்று மாலை– இரவு என்று நள்ளிரவு வரை காத்திருந்தும் பலனில்லை. அவனைப் பற்றின விஷயம் எதுவும் தெரியவில்லை.

இவளால் தூங்க முடியவில்லை. படுக்கையில் படுக்க முடியவில்லை. மெத்தை, முள்ளாகக் குத்திற்று. 'என்ன ஆயிற்று' என்ற கேள்வி நெஞ்சில் நெம்பிக்கொண்டு நின்றது.

எழுந்து ஜன்னல் வழியாக வெளியில் பார்த்தா திடீரென்று அவனது கார் 'ஹார்ன்' சத்தம் கேட்கிற பிரமையி கதவைத் திறந்து வாசலுக்கு ஓடிப் போய் பார்த்தாள்.

தெரு இருட்டாய், நிசப்தமாய், வெறுமையாய்– அவ மனசைப் போல் கிடந்தது. இப்படி மூன்று, நான்கு மு பிரமை பிடித்த மாதிரி ஓடிப் போய் பார்த்து, ஏமாந்து மீண்டும் படுக்கையில் உட்கார்ந்தபோது அழுகை வந்தது.

தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு, குமுறி குமுறி அழுதாள். 'சேகர், என்ன ஆயிற்று உங்களுக்கு? ஏ வரவில்லை?'– என்று கதறினாள்.

இப்போது அவளுக்கு மனைவி என்கிற வார்த்தையி முழு அர்த்தமும் புரிந்தது. மகிமை தெரிந்தது. தான் அவன மனைவியாக இருந்திருக்கிற பட்சத்தில் இந்தத் தவிப் இல்லை, வேதனை இல்லை. பிரிவு, ஏக்கமும் இல்லை. இப்ப விவரம் புரியாமல் படுகிற அவஸ்தை இல்லை. இத்தனைக்கு காரணம், தான் அவனது மனைவி இல்லை.

இது இம்சை. மிகப் பெரிய இம்சை. நெஞ்சில் மு குத்திக்கொண்ட மாதிரியான இம்சை. வெளியில் தெரியா வேதனை.

உள்ளுக்குள் எரிந்து உருக்குலைக்கிற வேதனை. இவ எரிந்துகொண்டிருந்தாள். அவனது நினைவின் தகிப்பி பொசுங்கிக்கொண்டிருந்தாள்.

'சேகர்... நான் இந்தப் பிரிவில் எரிந்து சாம்பலாவதற்கு வருவீர்களா? வந்துவிடுவீர்களா? எனக்கு உங்களை பார்க்க வேண்டும் போல் இருக்கிறது. இப்போதே பார்க் வேண்டும்.

பார்க்க முடியாவிட்டால் போகட்டும். ஒரு முறை உங்க குரலைக் கேட்டுவிட்டால் போதும். 'லவ் யு டார்லிங்' சொல்



வேண்டாம். கண்ணம்மா... என்று கரையக்கூட வேண்டாம். வெறுமனே ஒரு 'ஹலோ... ஐயம் ஆல் ரைட் மஞ்சு' என்கிற வார்த்தைகள் மட்டும்.

வருமா... காலையிலாவது அவன் குரலைக் கேட்க முடியுமா...?

அவள் காலையை நோக்கி உட்கார்ந்தவாறு, இருட்டை வெறித்தபடி காத்திருக்கலானாள்.

## 6

அன்றைய காத்திருத்தலும் வீணாயிற்று. சந்திரசேகரன் வரவே இல்லை.

மாலை வரை அவளின் துடிப்பு அதிகமாகி, அதற்கு மேல் தாங்க இயலாதவளாக டிரைவரைக் கூப்பிட்டு விசாரிக்கலானாள்.

"முதலாளி வீடு எங்கே இருக்குன்னு உனக்குத் தெரியுமா வேலு?"

"தெரியும்மா... அவரு வீட்டு டிரைவர்கூடப் பழக்கம்தான்."

இவள் யோசித்து மெதுவாகச் செயல்படத் தொடங்கினாள்.

"ஒண்ணு செய் வேலு. முதல்ல முதலாளியோட பாக்டரிக்குப் போய் அவரைப் பார்க்கணும்னு கேளு... என்ன பதில் வருதுன்னு வந்து சொல்லு. அப்புறம் பார்க்கலாம்... என்ன?"

"சரிங்கம்மா..."

"இப்பவே போறியா...?"

"இப்ப மணி அஞ்சாயிடுச்சுங்களே... பாக்டரியில் யாரு
இருக்கமாட்டாங்களே...?"

"அப்படின்னா அவர் வீட்டு டிரைவரை விசாரி. டிரைவ
கிடைக்கலைன்னா கூர்க்கா, தோட்டக்காரன் யாரையாவது
விசாரிச்சு வந்து சொல்லு... என்ன?"

"சரிங்கம்மா."

"எப்படியாவது ராத்திரிக்குள்ள எனக்கு அவரைப் பத்தி
விவரம் தெரிஞ்சாகணும். ஏன் நாலு நாளா வீட்டுக்கு
வரலைன்றது தெரியணும்."

"எப்படியும் விசாரிச்சுட்டு வந்து சொல்றேம்மா."

"நீ இங்கேருந்து வரேன்றது அங்கே யாருக்கும்
தெரியக்கூடாது."

"தெரியும்மா, சொல்லமாட்டேன்."

"உடனே புறப்படு. ராத்திரி எத்தனை நேரமானாலும்
காத்துட்டிருப்பேன்."

புறப்பட்டுப் போன ஒரு மணி நேரத்திற்கெல்லாம் வேலு
திரும்பி வந்து சொன்னான்.

"அம்மா... முதலாளிக்கு ரொம்ப உடம்பு சரியில்லையாம்
இன்னும் நினைவு திரும்பலேன்னு பேசிக்கிறாங்க
ஆஸ்பத்திரியில 'அட்மிட்' ஆகி நாலு நாளாச்சாம். இங்கே
வந்துட்டுப் போன அன்னிக்கு ராத்திரி, பாத்ரூம்ல தவறி
கீழே விழுந்திட்டாராம். உடனே ஆஸ்பத்திரிக்கு தூக்கிட்டுப்
போனாங்களாம்."

அவன் முடிப்பதற்குள்–

இவள் துடித்துப்போனாள்.

கண்ணில் நீர்கட்டிக்கொண்டது. மனசு பதறிற்று. அறுந்த
போன பல்லியின் வால் மாதிரி துடித்தது.

"ஐயோ... அவருக்கு என்ன...? இங்கிருந்து நன்றாகத்தானே



போனார்? நினைவில்லாமல் இருக்கிற அளவுக்கு
என்னவாயிற்று! நான்கு நாட்களாக ஆஸ்பத்திரியில்
கிடக்கிறார். போய்கூடப் பார்க்க முடியாமல் கிடக்கிறேனே...
விவரம் தெரியாமல் இருந்திருக்கிறேனே! முருகா... அவரைக்
காப்பாற்று... ஆஞ்சனேயா அவரை நல்லபடி வை.
அவருக்கு ஒன்றும் ஆகக் கூடாது... நல்லபடி எழுந்து வர
வேண்டும்."

நாக்கு வரண்டது. பேச்சு எழும்ப மறுத்தது.

பாபர் மாதிரி அவர் உடம்பைத் தான் வாங்கிக்கொண்டு,
அவரை உயிரோடு எழுப்பி உட்கார்த்தி வைத்துவிட வேண்டும்
என்று தவித்தது. ஆனால், அந்தச் சக்தி இல்லையே! சாவித்திரி
மாதிரி போராடுகிற சக்திகூட இல்லையே!!

இப்போது என்ன செய்ய முடியும்? அவரைப் பார்க்க
வேண்டுமே... உடனே இந்த நிமிடமே பார்க்க வேண்டுமே...
விடுவார்களா? தன்னைப் பார்க்க அனுமதிப்பார்களா...? யார்
இருக்கிறது அவருடன்? நிம்மியாக இருந்தால் சமாளித்துப்
பார்த்துவிடலாம். புவனா இருக்கிற பட்சத்தில் என்ன செய்ய
முடியும்? யார் இருந்தாலும், தன்னை என்ன சொன்னாலும்
சரி... அவரைப் பார்க்காமல் இருக்க முடியாது. எப்படியாவது
பார்த்தே ஆக வேண்டும்.

"எந்த ஆஸ்பத்திரின்னு கேட்டியா வேலு...?"

மெதுவாக தன்னை சமாளித்துக்கொண்டு கேட்டாள்.

"விஜயான்னு சொன்னாங்கம்மா."

"கூட இருக்கிறது யார் தெரியுமா?"

"அவரு சம்சாரம் இருக்கிறதா சொன்னாங்க. பொண்ணு
போய் பார்த்துக்கிட்டு வருதாம்."

"சரி. என்னை அந்த ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டுப்
போறியா?"

"........."

"என்ன பேசாம இருக்கே?"

"இல்லம்மா... அந்தம்மா இருக்குதே! நீங்க போகணும்னு
சொல்றீங்களேன்னுதான்..."

"யார் இருந்தாலும் சரி. எனக்கு எப்படியாவது அவரைப்
பார்க்கணும். இனிமேல் அவரைப் பார்க்காமல் ஒரு
நிமிஷம்கூட இருக்க முடியாது. அதுவும் உடம்பு சரியில்லை
ஆஸ்பத்திரியில 'அட்மிட்' ஆகி இருக்காரு. நினைவு
திரும்பலைன்றப்ப... நான்... எனக்கு..."

அதற்கு மேல் பேச முடியாமல் தடுமாறி உடைந்து
போனாள்.

கரகரவென்று கன்னங்களில் நீர் வழியத் தொடங்கிற்று
விசும்பலும், விம்மலும் அதிகமானபோது– அதைத் தாங்க
முடியாமல் படபடத்தான் வடிவேலு.

"அழாதீங்கம்மா. அவருக்கு ஒண்ணும் இருக்காது. உங்க
நல்ல மனசுக்கு அவருக்கு எதுவும் ஆகாது. கிளம்புங்கம்மா
இப்பவே கூட்டிட்டுப் போறேன்."


அப்படியே கண்களைத் துடைத்துக்கொண்டு
கிளம்பிவிட்டாள் அவள்.

சகுந்தலாவைக் கூப்பிட்டு, வீட்டைப் பார்த்துக்கொள்ள
சொன்னாள். போகும் முன் மறக்காமல் சுவாமிக்கு
விளக்கேற்றி, தீபாராதனை காட்டி வேண்டிக்கொண்டுதான்
கிளம்பினாள்.

வண்டி– மர நிழலில் கார்கள் நிற்குமிடத்தில் நின்றதும்–
இவளே கீழே இறங்கிப் போனாள்.

"நானும் கூட வரட்டுமாம்மா?"– என்ற வேலுவிடம்
வேண்டாமென்று தலையசைத்து– ரிசப்ஷனில் விசாரித்து
சந்திரசேகரன் இருப்பதாகச் சொன்ன 'இன்டென்ஸிவ் கே





யூனிட்'டை நோக்கி நடந்தபோது மனசு படபடத்தது. கால்
துவண்டு தரையடியில் நழுவுகிற உணர்வு ஏற்பட்டது.

ஒவ்வொரு அடியையும் அழுத்தி அழுத்தி வைத்த
உள்ளுக்குள் தனக்குத் தெரிந்த சுலோகமெல்லாம் சொன்ன
சந்திரசேகருக்கு ஒன்றும் ஆகக் கூடாது என்பதே மி
பெரிய சுலோகமாக ஒடிற்று.

அவற்றையெல்லாம் மீறி- புவனாவை நேரில் சந்தி
நேரிட்டால் என்ன செய்வது என்கிற பயம் பெரித
இருந்தது.

அவள் பயந்த மாதிரிதான் ஆயிற்று!

சந்திரசேகரன் படுத்திருந்தாகச் சொன்
அறை வாசலில்- 'Please... do
disturb' - என்ற போர்டு.

இவள் தயங்கி, அறைக் கதவைத் தட்டப் பய
தடுமாறினபோது-

ஒரு நர்ஸ் வருவது தெரிய- நிறுத்திக் கேட்டாள்.

"சிஸ்டர், சந்திரசேகரன்றவர் இந்த அறையிலதா
இருக்கார்?"

"ஆமா. ஆனா, அவரைப் பார்க்க யாரை
அனுமதிக்கிறதில்லையே..."

"நான் தூர நின்னு பார்த்துட்டுப் போயிடறேன் சிஸ்
அப்படிப் பார்க்க அனுமதி இருக்குமில்லையா?"

"ம்... உள் வராந்தாவில் அவரோட மனை
உட்கார்ந்துட்டிருக்காங்க. போய்ப் பாருங்க."

இவளுக்குத் திக்கென்றது.

ஆனாலும், வேறு வழியில்லை. புவனாவைச் சந்தி
ஆக வேண்டும். அதைத் தவிர்க்க முடியாது.

அவள் என்ன சொன்னாலும், எத்தனை பேசினா



...மாய் கேட்டுக்கொண்டு- அவரைப் பார்த்துவிட்டு
... வேண்டும். அவரைப் பார்ப்பது ஒன்றுதான் முக்கியமே
... வேறில்லை. அது ஒன்றுதான் குறிக்கோளே தவிர...
... எதுவுமில்லை.

அதற்காக எதுவும் செய்யலாம். எந்தத் திட்டும்
...டுக்கொண்டு- அடித்தால் கூட வாங்கிக் கொள்ளலாம்.
... எதை வேண்டுமானாலும் செய்யட்டும். ஒரு முறை...
... முறை பார்க்க அனுமதித்தால் போதும். அதற்காக
... கால்களில் விழ வேண்டுமானால் கூட அதற்கும்
... தயார்-

ஆனால், இவள் அவனைப் பார்க்கக் கூடாது என்பதில்
... தீவிரமாக இருந்தாள். பிடிவாதமாக இருந்தாள்.

...சொல்லி வெளியில் வந்த அவள், ஒரு விநாடி மஞ்சுவை
... யார் என்பது புரியாமல் "எஸ்?" என்றாள்.

"... நான் மிஸ்டர் சந்திரசேகரைப் பார்க்க
...கேன்."

"...யாரு?"

"...?"

"...யாருன்னு கேட்டேன்?"

"...மஞ்சு."

...ென்று புவனாவின் முகம் சிவந்தது. உடல்
...மெல்லாம் தலைக்கு ஏறிற்று. தீப்பிடித்த மாதிரி
...

அரசல்புரசலாக மஞ்சுவைப் பற்றி அவள்
...டிருந்தாள். சந்திரசேகரன் அடிக்கடி அங்கு
...வதாக யார் யாரோ சொன்னார்கள். அவனது
... மணிக்கணக்கில் அவள் வீட்டின் முன்பு நிற்பதைத்
...படுத்தினார்கள்.

ஆனாலும், அவள் ஏனோ அதைப் பெரிதா
நினைக்கவில்லை. அந்த விஷயத்தைப் பெரிதுபடுத்தவில்லை
சந்திரசேகரனை மிக நன்றாகத் தெரிந்திருந்த காரணத்தா
அவனால் 'எக்ஸ்டிரா' நடிகையுடனெல்லாம் பழக முடியா
என்று நினைத்தாள். அப்படியே பழகினாலும் கூட அவன
மன நுனியோ, விரல் நுனியோ கூட அவர்களைத் தொடா
தொட விடமாட்டான் என்பதை உணர்ந்திருந்த காரணத்தா
அவர்கள் சொன்னதை எல்லாம் அலட்சியப்படுத்தினாள்

கார் டிரைவரைக் கூப்பிட்டுக்கூட விசாரிக்கவில்லை
அலுவலகத்திற்கு போன் போட்டு தெரிந்துகொள்
நினைக்கவில்லை. அப்படியெல்லாம் விசாரிப்பது த
தகுதிக்குக் கீழ்பட்ட செயல் என விட்டுவிட்டாள். தன
தகுதியைவிட சந்திரசேகரனின் தகுதி அதையெல்லா
செய்யாது என்ற ஆணித்தரமான நம்பிக்கை வேறு...

'எக்ஸ்டிரா' நடிகைகளோடெல்லாம் அவனால் எப்ப
ஈடுபாடோடு பழக முடியும்? பணத்தைத் தவிர அவ
வேறு எதை எதிர்பார்க்கப் போகிறாள்? வெறும் உட
ஈடுபாட்டிற்குப் பழகுகிற பழக்கம் எத்தனை நாள் நிலைக்கும்
என்கிற நினைப்பில் மஞ்சுவின் உருவத்தை கற்பனை செ
பார்த்தே அலட்சியப்படுத்தி இருந்தாள்.

அந்தக் கற்பனைக்கும், இப்போது எதிரில் நின்ற மஞ்சுவிற்
இருந்த வித்தியாசம் அவளை அயர அடித்தது. து
நடிகையாக இருந்தவள் இவள் என்பதை சத்தியம் பண்ண
சொன்னாலும் நம்ப முடியாது என்று தோன்றியது.

அந்த அழகும், களையும், புதிதாகப் பொருந்தி இரு
கம்பீரமும் தனக்குக்கூட இல்லை என்பது இன்ன
உறுத்தலாக நின்றது. மஞ்சள் பூசின முகம், சாந்தமா
பார்க்கும் விசாலமான கண்கள், செதுக்கின மாதிரி மூ
சின்னதாய் சிவந்த வாய், மெலிதான உதடுகள், குமிழ்



[illegible] கருகருவென்று அடர்த்தியாய்- வளைசல்
[illegible] முட்டியைத் தொடும் கூந்தல், காதிலும்... ஒரு
[illegible] மூக்கிலும் வைரம் டாலடித்தது.

கழுத்துச் சங்கிலி, கைகளில் மெலிதாய் தங்க வளையல்கள்.
[illegible] போட்டு இஸ்திரி செய்த நல்ல சரிகையிட்ட நூல்
[illegible] தகதகவென்ற நிறம்.

பார்க்கப் பார்க்க புவனாவின் வயிறு பற்றி எரிந்தது.

அந்தக் களையும், மஞ்சள் பூசிய முகமும், குங்குமப்
[illegible]டும், காதிலும் மூக்கிலும் டாலடிக்கும் வைரங்களும்...
[illegible] வைரங்களில் நீல நிற ஜொலிப்பும் அவளுக்கு
[illegible]து. இந்த புளூஜாக்கர் வைரம் கும்பகோணம்
[illegible] ஆச்சாரியிடம் இருந்து வாங்கப்பட்டவை
[illegible] அவரிடம் மட்டும்தான் இந்த விலை உயர்ந்த வைரம்
[illegible] தங்களுக்கென்று தனியாக எடுத்து வைத்துவிட்டு,
[illegible] பண்ணுவார்.

[illegible] பண்ணிய வைரத்தை சந்திரசேகரன் இவளுக்குத்
[illegible]கவும், மூக்குத்தியாகவும் செய்து போட்டிருக்கிறான்.
[illegible]ளையல்களும், கழுத்து சங்கிலியும், கால் மெட்டியும்,
[illegible] நின்றால் யாரும் இந்த மஞ்சுவைத்தான் அவனது
[illegible] என்பார்கள். அந்த அழகும், அமரிக்கையும்
[illegible]தான் சொல்ல வைக்கும்.

அவன் தன்னை ஏமாற்றி இருக்கிறான். இத்தனை நாளும்
[illegible] ஏமாந்து போயிருக்கிறோம். புளூஜாக்கர் வைரத் தோடும்,
[illegible]யும், கைவளையல்களும், சங்கிலியுமாக இவளுக்கு
[illegible] கொடுத்திருக்கிறான். இவை மட்டுமா வாங்கிக்
[illegible]த்திருப்பான்? வைர அட்டிகை, வைர வளையல், வீடு,
[illegible], கார், தோட்டம் துறவு...

அதற்கு மேல் தாங்க முடியாதவளாக இவள் பாய்ந்து
[illegible]வின் தலைமுடியைப் பற்றி இழுத்து, கன்னத்தில் ஓங்கி

ஒரு அறை விட்டாள். முதுகு, கை, மார்பு என தன் பலம் கொண்ட மட்டும் தாக்கினாள்.

"ஏண்டி...கேடுகெட்டவளே! உனக்குஎன் வீட்டுக்காரன்தான் கேட்டுச்சா...? பன்றி மாதிரி கண்டவனோடெல்லாம் கட்டிப் புரளுற உனக்கு, கண்ணியமான எங்க குடும்பமா வேணும்...?" –என்று ஆரம்பித்து அடிகளும், உதைகளும், காது கேட்க முடியாத வசவுகளும், கத்தலும், கூச்சலுமாக புவனா அமர்களப்படுத்த–

ஆஸ்பத்திரி ஊழியர்களும், நர்ஸ்களும், நிம்மியும் ஓடி வந்து தடுத்து புவனாவின் பிடியில் இருந்து மஞ்சுவை விடுவித்தபோது– மஞ்சு தலை கலைந்து, ஜாக்கெட் கிழிந்து, புடவை அவிழ்ந்து, கசக்கிப் போட்ட காகிதம் போல் நிலைகுலைந்து போன விநாடியில்– உள்ளே சந்திரசேகரனின் உயிரும், உடலைவிட்டுப் பறந்து போய் வெற்று உடம்பாகக் கிடந்தது.

## 7

சந்திரசேகரன் மறைந்து பதினைந்து நாளாவதற்குள் ஈமக்கிரியைகள் முடியக் காத்திருந்த மாதிரி அவரது தொழிற்சாலை அமளிப்பட்டது. அதன் பின்னரே தொழிற்சாலை மீதும், இயந்திரங்களை அடகு வைத்தும் அவர் வாங்கி இருந்த கடன் தகவல் வெளிவந்தது.

வங்கி அதிகாரிகளும், வெளியில் இருந்து கடன் கொடுத்த இதர மனிதர்களும் வீட்டையும், தொழிற்சாலையையும் சூழ்ந்துகொண்டனர். வங்கிக் கடனுக்கு தொழிற்சாலையும், இயந்திரங்களும் சரி



சய்யப்பட்டன. மற்ற கடன்களாக ஒரு கோடி ரூபாய்க்கு ற்க– தன் பெயரில் இருந்த வீட்டையோ, நகைகளையோ, ற்ற நிலங்களையோ கொடுக்க புவனா மறுத்துவிட்டாள்.

"என்கிட்டே இருந்து பைசா கிடைக்காது. இதெல்லாம் ங்கப்பா எனக்குக் கொடுத்த சொத்து. இதில் இருந்து கேட்க ாருக்கும் உரிமை கிடையாது. என்னைக் கேட்டா கடன் கொடுத்தீங்க? இல்ல, கடன் பத்திரத்துல நான் கையெழுத்து போட்டிருக்கேனா? போங்க வெளியில! இன்னொரு முறை இந்தப் பக்கம் வந்தீங்க... நடக்கிறதே வேற..."– என்று இடுப்பில் கை ஊன்றி அவள் கத்தின கத்தலில், எந்தக் கையெழுத்துமின்றி வெறும் வாய்ச் சொல்லை நம்பி லட்சக்கணக்கில் பணம் கொடுத்த அத்தனை பேரும் அடிவயிறு கலங்க அமைதியாக வெளியேற, வாசற்கதவை அறைந்து மூடினாள் புவனா.

இந்த பதினைந்து நாட்களில் உருகி உருகிப் பாதி ஆளாகிப் போயிருந்தாள் மஞ்சு.

'என்னை இப்படி தனியாக விட்டுப் போக உங்களுக்கு எப்படி மனசு வந்தது...? என்னைப் பார்க்காமல், ஒரு வார்த்தை பேசாமல் போயிட்டீங்களே! 'வா மஞ்சுன்னு' கூப்பிட்டிருந்தால் சந்தோஷமாக ஓடி வந்திருப்பேனே? இப்படி தவிக்க விட்டுப் போயிட்டீங்களே...?' என்று குமுறினாள்.

அறையைவிட்டு வெளியே வராமல் உள்ளுக்குள்ளேயே முடங்கினாள்.

சகுந்தலா மட்டும் தைரியமாக உள்ளே போய் ரசம் சாதமும், மோர் சாதமும் கரைத்து தம்ளரில் ஊற்றி எடுத்து வந்து வற்புறுத்தி குடிக்க வைத்தாளே தவிர... மற்ற யாருக்கும் அவளைப் பார்க்கிற தைரியமில்லை. வேலு கூட அறை வாசல் வரை வந்து, 'முடியாது சகுந்தலா... என்னால அவுங்களைப் பார்க்க முடியாது. அந்தச் சக்தி எனக்கில்லை...' என்று

போனவன்– அன்று மட்டும் கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தான்.

கூடை நாற்காலியில் உட்கார்ந்து எங்கோ வெறித்துக்கொண்டிருந்த மஞ்சு அவன் பக்கம் திரும்பி– கண்ணீர் வடித்தாள்.

அதைப் பார்த்த வேலு திடமாகச் சொன்னான்.

"அம்மா... முதல்ல நீங்க கண்ணைத் துடையுங்க..."

"முடியலை வேலு... என்னால எப்படி முடியும் சொல்லு...?"

"முடியும்மா... உங்களால் முடியும். கடலைத் தாண்டி இலங்கைக்குப் போறதுக்கு முன்னால ஆஞ்சநேயருக்குக்கூட அவர் பலம் தெரியல..."

"இனிமே எனக்கென்ன பலம்...?"

"இனிமேதாம்மா நீங்க பலமா செயல்படணும். நம்ம முதலாளி வச்சிட்டுப் போன கடனையும், அதனால ஏற்பட்ட பழியையும் தீர்க்கணும்!"

"கடனா...? நம்ம முதலாளிக்கா...? என்ன சொல்ற...?"

வேலு முழுதுமாய் சொல்லி முடிக்கிற வரை அமைதியாய் கேட்டுக்கொண்டிருந்தாள் மஞ்சு. பின்னர் நிதானமாக யோசித்து அதன்பின் வாய் திறந்தாள்.

"புவனாம்மா சொன்னதிலோ... அவங்க அப்படி நடந்துக்கிட்டதிலோ தப்பில்லை வேலு. அவங்களால் வேறு எப்படியும் நடந்திருக்க முடியாது. பாவம்! அவங்க வசதியாக வாழ்ந்தவங்க. காசுக்கும், பணத்துக்கும் கஷ்டப்படாதவங்க. வறுமை தெரியாதவங்க. வயித்துப் பசி அறியாதவங்க. அதனால் கடனைக் கண்டு மிரண்டு போயிருப்பாங்க... கூடவே கல்யாணத்துக்கு ஒரு பொண்ணையும் வச்சுக்கிட்டு இருக்கிறதால் கடனை அடைக்க முன் வந்திருக்க

மாட்டாங்க..."

வேலு அவளை அமைதியாகப் பார்த்துக்கொண்டு நின்றான். அவள் தொடர்ந்து பேசினாள்.

"ஆனால், நான் அப்படியில்ல வேலு. பசி, பட்டினி, வறுமை, கடன் எல்லாத்துலேயும் முழுகி எந்திரிச்சவ. இன்னிக்கு காரும், பங்களாவும், வேளை தவறாமல் சாப்பாடும், டிபனுமா வாழறேன்னா... அதுக்குக் காரணம் உங்க முதலாளிங்கற புண்ணியவான். அந்த தெய்வம் போட்ட பிச்சை இது!"

வேலு கண் கலங்கி மனசுக்குள் கை கூப்பி அவளை ஏறிட்டான்.

"அந்தத் தெய்வத்துக்கு உதவாமல் வேறு யாருக்கு உதவப் போவுது? கடனுக்காக அவர் பெயரைக் களங்கப்படுத்துறாங்கன்னா அதைப் பார்த்துக்கிட்டு நம்மால சும்மாவா இருக்க முடியும்...?"

"அ...ம்...மா...?"– இப்போது கரகரவென்று கண்ணீர் விட்டான்.

"கண்ணைத் துடைச்சுக்க வேலு. இது அழுறதுக்கான நேரமில்லை. இனி ஒரு நிமிஷம் கூட அவர் பேர் மாசு படும்படி விடக்கூடாது. அவருக்குக் கடன் கொடுத்தவங்க யார் யாருன்னு உனக்குத் தெரியுமா?"

"அவங்க வீட்டு டிரைவருங்க எல்லாம் பழக்கங்க!"

"நல்லது. அந்த டிரைவர்களிடம் சொல்லி அவங்க முதலாளிகளை எல்லாம் இன்னிக்கு சாயந்திரம் நாலு மணிக்கு நம்ம வீட்டுக்கு வரச் சொல்லு..."

"அம்மா... என்ன செய்யப் போறீங்க...?"

"நன்றி, விசுவாசம், பழகின அன்பு, காட்டின பாசம்னு எல்லாம் சாகாது. உலகத்துல இருந்துக்கிட்டுத்தான் இருக்குதுன்னு எடுத்துக்காட்டப் போறேன்..."



வேலுவுக்குப் புரிந்தும், புரியாமலும் இருந்தது.

ஆனாலும், மேலே கேள்வி கேட்காமல்... அமைதியாக வெளியேறினான் அவன்.

## 8

"அம்மா... அவங்க யாரும் நம்ம வீட்டுக்கு வரமாட்டாங்களாம். நம்மை அவங்க ஆபீசுக்கு வரச் சொல்றாங்க. பாண்டுரங்கன் என்கிறவர் ஆபீஸ்ல எல்லாரும் கூடுறாங்களாம். நம்மை வரச் சொல்றாங்க..."

"மொத்தம் எத்தனைப் பேர்?"

"அஞ்சு பேருங்கம்மா..."

"எத்தனை மணிக்குக் கூடுறாங்களாம்?"

"காலையில பத்து மணிக்கும்மா..."

"நீயும் என் கூட வர்றேல்ல...?"

"என்னம்மா இப்படி கேக்கறீங்க...? நீங்க சொன்ன நன்றி, விசுவாசம், அன்பு, பாசம் எல்லாம் என் உடம்புலேயும் ஓடுதும்மா..."

"சரியா பத்தாவது மணிக்கு நாம அங்க இருப்போம்!"

"சரிங்கம்மா!"

## 9

நெற்றி நிறைந்த விபூதியும், இழுத்துப் போர்த்திய புடவையும், அழகும், அமைதியும், நிதானமுமாக

அறைக்குள் நுழைந்த மஞ்சுவைக் கண்டு அவர்கள் அத்தனை பேரும் தாமாக எழுந்து நின்றனர்.

அவள் கூப்பிய கைக்கு பதில் கை கூப்பினர்.

"எல்லாரும் உக்காருங்க. எதுக்கு எழுந்திரிக்கிறீங்க?"

"நீங்களும் உட்காருங்கம்மா..." என்றனர், மரியாதையுடன்.

எதிரே வேலு இழுத்துப் போட்ட நாற்காலியில்– கூட வந்த சகுந்தலாவைப் பக்கத்தில் இருத்திக் கொண்டு உட்கார்ந்த மஞ்சு– ஒரு விநாடி அமைதியாக அவர்கள் அத்தனைப் பேரையும் பார்த்துவிட்டு– பின் மெதுவாகப் பேச ஆரம்பித்தாள்.

"இதோ பாருங்க! மிஸ்டர் சந்திரசேகரனுக்கு நீங்க கொடுத்த கடனுக்காக கவலைப்பட வேண்டிய தேவையில்லை. சந்திரசேகரனுக்கு நான் மனைவி இல்லை. ஆனா, மனைவி மாதிரி வாழ்ந்தவள். எப்போது அவர் கொடுத்த வீடு, கார், வைரநகைகள் என எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டேனோ அதேபோல் அவர் பட்ட கடனையும் வாங்கிக்க வேண்டியது என் கடமை!"

இதை எதிர்பார்க்காத சபை மிரண்டது.

"எனக்கு அவர் வாங்கிக் கொடுத்த பங்களா அபிராமபுரத்தில் இருக்கு. இரண்டரை கிரவுண்டு. இன்னிக்கு நிலம் விற்கிற விலைக்கு என்ன போகும்னு நீங்களே கணக்கு போட்டுக்குங்க..."

மறுபடியும் சபை அரண்டது.

'இப்படியும் ஒருத்தியா! இப்படிக்கூட இருக்க முடியுமா? கட்டின பெண்டாட்டி கண்டபடி திட்டி கதவறைந்து சாத்தினாள். இவளோ கேட்காமலே கூப்பிட்டு, கடனை அடைக்கப் பேசுகிறாளே! இன்னும் கூட இந்த உலகத்தில் இதெல்லாம் வாழுகிறதா...?

வாயடைத்து உட்கார்ந்திருந்தனர்.



மேலே பேசினாள் மஞ்சு.

"கதவு, ஜன்னல் எல்லாமே பர்மா தேக்கு. பிரித்து பிற்றால் கூட பல லட்சம் போகும். போதாதற்கு இதோ ன் நகைகள்!"

சகுந்தலா பக்கம் கை நீட்ட– அவள் கொண்டு வந்திருந்த பெட்டியைக் கொடுத்தாள்.

திறந்து அதை மற்றொரு நாற்காலியில் வைத்தாள் மஞ்சு.

"வைரத்தோடு, வைர மூக்குத்தி, வைர வளையல், அட்டிகை, தங்கச் சங்கலி, வளையல்கள் என எல்லாம் இருக்கு..."– என்றவள், வேலுவைப் பார்த்தாள்.

வேலு, கார் சாவியை நீட்டினான்.

அதையும் வாங்கி நகைப் பெட்டியில் போட்டாள்.

"கீழே என் கார் இருக்கு. மொத்தத்தையும் சேர்த்து என்ன தேறும்னு நீங்களே கணக்கு பார்த்துக்குங்க. உங்க எல்லார் கடனுக்கும் வட்டி போட்டு எடுத்துக்கிட்டு, மீதி ஏதாவது இருக்கும்னால் எனக்குத் தாங்க. இல்லாட்டி போனா பரவாயில்லை. அப்ப நான் வரட்டுமா...?" என்று எழுந்து நின்று கை கூப்பியவள்– நாலடி நடந்து பின் நின்றாள்.

"இன்னும் ஒரு விஷயம்."

"சொல்லுங்கம்மா..." என்றார் பாண்டுரங்கன்.

"வீட்டை இன்னிக்கே காலி பண்ண முடியாது. ஒரு வார அவகாசமாவது வேணும்."

"என்னம்மா நீங்க... புறப்படுங்கம்மா. இதுக்கு மேல எங்க மனசை கஷ்டப்படுத்தாதீங்க, பிளீஸ்..."

வேலுவும், சகுந்தலாவும் பிரமை பிடித்த நிலையில் டாக்ஸியில் அவளுடன் வீடு திரும்பினர்.

கதவைத் திறந்து உள்ளே நுழைந்ததும், கட்டுப்படுத்த இயலாதவனாகக் கதறிவிட்டான் வேலு.

அப்போதும் சலனமற்றவளாகக் கேட்டாள் அவள்.

"எதுக்கு அழுற வேலு...?"

"அம்மா... நீங்க தெய்வம்மா. சாதாரணப் பிறவி இல்லேம்மா. உங்களை மாதிரி நூத்துல ஒண்ணு... ம்ஹூம்... ஆயிரத்துல ஒண்ணு... இல்லீங்க, லட்சத்துல ஒருத்தரைக் கூடப் பார்க்க முடியாதுங்க..."

"அப்படி நான் என்ன செய்துட்டேன் வேலு...?"

"என்ன செய்துட்டீங்களா...? நீங்க இன்னைக்கு செய்த காரியத்தை யாரு செய்வாங்க? பணம்னால் எப்படிப்பட்டவங்களும் கையை விரிக்கிற காலம்மா இது. சிவாஜி கணேசன் ஒரு படத்துல பாடுவாரு. நீங்க கூட கேட்டிருக்கலாம், 'குளத்திலே தண்ணியில்லே, கொக்குமில்லே, மீனுமில்லே, பெட்டியிலே பணமில்லே, பெத்தபிள்ளே சொந்தமில்லே'னு அப்படிப்பட்ட ஒரு நிலைமை. நீங்க... நீங்க..."– மேலே பேச முடியாமல், துண்டால் வாயைப் பொத்திக்கொண்டு அவன் குமுற–

மஞ்சு அமைதியாகச் சொன்னாள்.

"இது என்ன பெரிய விஷயம் வேலு? என் கடமையைத்தான் நான் செய்தேன். இதுல ஆச்சரியப்பட என்ன இருக்கு? போ... போய் சாப்பிடு. படுத்துக்க! நான் இன்னிக்குக் கொஞ்சம் சீக்கிரம் படுக்கப் போறேன்."

"சாப்பாடும்மா...?"– சகுந்தலா கேட்டாள்.

"வேணாம். பிடிக்கலை. ஒரு தம்ளர் மோர் மட்டும் கொடு..."

மோர் வாங்கிக் குடித்து– தன் அறைக்கு வந்து பாங்கி பாஸ் புஸ்தகம் எடுத்து– எவ்வளவு பணம் இருக்கிறது என்று பார்த்து– மொத்தத் தொகையில் பாதி சகுந்தலாவுக்கும், மீதத்தை வேலுவுக்குமாக 'செக்' எழுதி– கண்களில் படுமாறு வைத்துவிட்டு, சந்திரசேகரனை நினைத்தவாறு



படுத்துக்கொண்டாள்.

'இதற்காகத்தான் நான் உயிரோடு இருந்திருக்கிறேன், சேகர். இப்போது எல்லாக் கடமைகளையும் முடித்தாயிற்று. நானும் உங்களோடு வந்து சேர்ந்துகொள்கிறேன். என்னை அழைத்துக்கொள்ளுங்கள்.

சாவு கூட நம்மை பிரிக்கக் கூடாது என்று சொன்ன மாதிரி– என்னை அழைத்துக்கொண்டு போய்விடுங்கள்.'

நிற்சிந்தையாய்... நிர்மலமாய் அவள் கண்கள் நிரந்தரமாக மூடிக்கொள்ள–

அதை அறியாதவர்களாக வடிவேலுவும், சகுந்தலாவும் படுக்கப் போனார்கள்.

**(முற்றும்)**

## காந்தியைக் கவர்ந்த தமிழச்சி

தென்னாப்பிரிக்காவில் அடிமையாக இருந்த இந்திய தம்பதிக்கு 1898–ல் பிறந்தார் தில்லையாடி வள்ளியம்மை.

வெள்ளையர் கொண்டு வந்த திருமணச் சட்டத்தை எதிர்த்து, காந்திஜியுடன் இணைந்து தனது பதினாறாம் வயதிலேயே போராட்டத்தில் ஈடுபட்டார். சிறையில் அடைக்கப்பட்டு துன்புறுத்தப்பட்டதால், அவரது உடல் நலிவடைந்து விடுவிக்கப்பட்டார்.

சிறை வாசலுக்குச் சென்று அவரை வரவேற்ற காந்திஜி, "சிறைவாசம் வருத்தம் தருகிறதா?" என்று கேட்டார். அதற்கு வள்ளியம்மை புன்னகைத்தவாறே, "உரிமை போராட்டத்துக்காக எத்தனை முறையும் சிறை செல்லத் தயாராக இருக்கிறேன். அங்கேயே உயிர் பிரிந்தாலும் ஆனந்தம்தான்" என்றார்.

விடுதலையான சில நாட்களிலேய அவர் மரணம் அடைந்தார்.